# ‘பேச்சுவார்த்தைமூலம் தீர்வின்றேல் வேறுவழி’


விலை ரூபா 1-25

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 சித்திரை 13 ஷஃபா 16 இதழ் 74

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 26-4-1986


## பாராளுமன்றத்தில் ‘லலித்’

(கொழும்பு)

‘‘இனப்பிரச்னைக்கு பேச்சுவார்த்தையின் மூலமாகவே தீர்வுகாண முடியும் என்பதை அரசு உணர்ந்துவிட்டது தீவிரவாதிகளுக்கும் இந்த உணர்வு ஏற்படவேண்டும் ராணுவ நடவடிக்கை மூலம் தீர்வுகாண முடியாது என்பதையும் நாம் உணர்ந்து விட்டோம் தீவிரவாதிகளுக்கும் இந்த உணர்வு ஏற்படவேண்டும்.

பேச்சுவார்த்தை மூலம் இந்தப் பிரச்னைக்குத்தீர்வுகாண முடியாது போனால் அரசுவேறு வழிமூலம் தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டிவரும்.’’

தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி, பாராளுமன்றத்தில் நேற்று அவசரகாலச்சட்டம் நீடிப்பு சம்பந்தமான குழுநிலை விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், எதிர்வரும் வாரம் திரு. ரொமேஷ்பண்டாரி இலங்கை வரவுள்ளார். அதற்கு முன் அவர் சென்னை சென்றுதமிழ்த் தீவிரவாதிகளைச் சந்தித்துபேசுவரர். பேச்சுவார்த்தைமூலம் இதற்குத்தீர்வு காணமுடியும் என்பதைத் தமிழ்த்தீவிரவாதிகளுக்கு உணர்த்துவதில் அவர் வெற்றிகாணவேண்டும் என்றார். (பி)

## பெண்ணுக்கு மரண தண்டனை

(திருகோணமலை)

சமூக விரோதச்செயல்களில் ஈடுபட்டதாகக் கருதப்பட்ட ஒரு பெண்துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

திருகோணமலை 3ம் கட்டை

(3ம் பக்கம் பார்க்க)

# மந்திரி சிதம்பரம், பண்டாரி சிலநாளில் இலங்கை வருவர்

## பயணம் பயன்தருமென்பதில் பண்டாரிக்குச் சந்தேகம்

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்னை குறித்து இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த இந்திய நிர்வாக சீர்திருத்த இணை அமைச்சர் திரு பி. சிதம்பரமும் முன்னாள் வெளியுறவுச் செயலாளர் திரு ரொமேஷ்பண்டாரியும் அடுத்தமாத முதல் வாரத்தில் கொழும்பு வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்ற வாரம்புதுடில்லியில் நடைபெற்ற மண்டல சார்பற்ற நாடுகளின் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் திரு ஏ. சி. எஸ் ஹமீத் இந்தியத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்களையடுத்தே இந்தப் பயணம் மேற்கொள்ளப்படுகிறது.

மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்குவது சம்பந்தமான இலங்கை அரசின் புதிய யோசனைகள் பற்றிச்சரியான விபரம்பெற்றுக் கொள்வதற்கு இவர்களின் பயணம் ஒரு வாய்ப்பு அளிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவில் யூனியன் பிரதேசங்களுக்கு வழங்கப்படுவது போன்ற அதிகாரங்களை இந்த மாகாண சபைகளுக்கு வழங்க

(5ம் பக்கம் பார்க்க)

## மாதகல் கரையில் ஹெலிகொப்டர் சூடு

### இருவர் காயம்; வள்ளங்கள் வீடுகள் சேதம்

(பண்டத்தரிப்பு)

மாதகல் கடற்கரை பழைய துறைமுகப் பகுதியில் நேற்று நண்பகல் திடீரெனச் சுற்றி வட்டமிட்ட ஹெலிகொப்டர் தாக்குதலில் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடிப் படகுகள் சேதமடைந்தன.

இத்தாக்குதலின்போது ஒரு பெண்ணும், ஒரு ஆணும் சிறு காயங்களுக்குள்ளானார்கள். சிலவீடுகளின் கூரைகளும் சிறிதுசேதத்திற்குள்ளாகின.

மாதகல் கடற்கரைப்பகுதித் தாக்குதலைத் தொடர்ந்து சேந்தான்குளப் பகுதியிலும் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மீன்பிடி வள்ளங்கள் மீது சரமாரியான துப்பாக்கிச்சூடு ஹெலிகொப்டரிலிருந்து நடத்தப்பட்டது. இதனால் மீன்பிடி வள்ளங்கள் பலத்தசேதத்துக்குள்ளாயின. [வா]

## ரூபவாஹினியில் சந்நிதித் தகவல்கள் உண்மைக்கு மாறு

### அரச அதிபரிடம் வல்வை பிரஜைகள் குழு ஆட்சேபம்

(வல்வெட்டித்துறை)

நேற்று முன்தினம் இரவுரூபவாஹினியில் இடம்பெற்ற செய்தி பற்றி வல்வைப் பிரஜைகள் குழுவினரும் செல்வச்சந்நிதி கோவில் நடவடிக்கை குழுவினரும் அரசாங்க அதிபரிடம் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

‘‘இரு தினங்களுக்கு முன்பு அரசாங்க அதிபர் குழு, பிரிகேடியர் குழு, பிரஜைகள் குழு மற்றும் பல பிரமுகர்கள் செல்வச்சந்நிதி கோவிலில் இராணுவத்தினரால் ஏற்படுத்தப்பட்ட சேதங்களை அறிந்துகொள்ளும் பொருட்டு தொண்டமனாறு செல்வச்சந்நிதி கோவிலுக்கு விஜயம்செய்தனர். உண்மையில் அங்கு நேர்ந்துள்ள அனர்த்தங்களை எல்லோரும் கண்களால் கண்டும், அவை யாவற்றையும் பொய்யாக்கும் வண்ணம் கடந்த இரவு ரூபவாஹினியில் காட்டப்பட்ட காட்சிகளும் செய்திகளும் அமைந்துள்ளன’

(5ம் பக்கம் பார்க்க)

## 3 மனித எலும்புக்கூடுகள்

[யாழ்ப்பாணம்]

தொண்டமனாறு செல்வச்சந்நிதி கோவில் சுற்றுப்பிரகாரத்தில் மூன்று மனித எலும்புக்கூடுகள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இவை ஒரு பெண்ணினதும் இரு ஆண்களினதும் எலும்புக்கூடுகள் என இனம்காணப்பட்டுள்ளன. அனாதைகளின் எலும்புக்கூடுகளாக இருக்கலாம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## வவனியா வங்கியில் கொள்ளை

[வவனியா]

வவனியா புகையிரத வீதி இலங்கைவங்கி கிளையிலிருந்து சுமார் ஒருலட்சத்து ஒன்பதாயிரம் ரூபா ரொக்கப்பணம் இனந்தெரியாத மூன்று இளைஞர்களினால் நேற்று கொள்ளையடிக்கப்பட்டது

வங்கி செயல்படுவதற்கு முப்பது நிமிடங்களுக்கு முன்னர் சைக்கிளில் வந்த இனந்தெரியாத மூன்று இளைஞர்கள் வங்கி பாதுகாப்பு ஊழியரின்

(5ம் பக்கம் பார்க்க)

## அநுராதபுரம் குண்டு: பாராளுமன்றில் வியாக்கியானம்

[கொழும்பு]

‘‘அநுராதபுரம் எண்ணைக் குதம் விபத்தில் வெடித்தது ‘அமுக்கக்குண்டு’. இந்தக் குண்டு ஒரு பெற்றோல் பவுசரில் பொருத்தப்பட்டிருந்தது. ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் பவுசரில் பெற்றோல் நிரப்பப்பட்டதும் ஏற்படும் அமுக்கம் காரணமாக இந்தக் குண்டு வெடிக்கும் சக்தியைப் பெற்று வெடித்தது’’

அநுராதபுரம் மாவட்ட அமைச்சர் திரு சந்திரா பண்டாரா பாராளுமன்றத்தில் நேற்று நடந்த அவசரகாலச்

[5ம் பக்கம் பார்க்க]

## சந்நிதி இழப்புகளுக்கு நிவாரணம் கிடைக்கும்?

[யாழ்ப்பாணம்]

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய அர்ச்சகர் தங்கராஜா சின்னையா ஐயரின் மரணம் தொடர்பாகவும், சந்நிதி ஆலய மற்றைய விடயங்கள் சார்பாகவும் நிவாரணம் பெற்றுத்தருமாறு வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுத் தலைவரும் செல்வச்சந்நிதி ஆலய விவகார செயற்பாட்டுக்குழுத் தலைவருமான பேராசிரியர் கா. சிவத்தம்பி, யாழ் அர

(5ம் பக்கம் பார்க்க)

## ‘‘அநுராதபுரம் சென்ற பவுசர், சாரதி, கிளீனர் நிலை அறிந்து உதவுக’’

### அரச அதிபருக்குக் கோரிக்கை

[புலோலி]

புலோலி ப. நோ. கூ. சங்கத்திற்கு எரிபொருள்கொண்டு வருவதற்காக அனுராதபுரம் எரிபொருள் கூட்டுத்தாபன சாலைக்குச்சென்ற வாடகைக்கு அமர்த்தப்பட்ட பவுசர், அதன்சாரதி, கிளினர், எம்மால் வழங்கப்பட்ட காசோலை ஆகியனவற்றின் நிலைப்பாடுகள் பற்றி விசாரணைகளை மேற்கொண்டு சங்கநலன் கருதி அறிவித்து உதவுமாறு புலோலி ப. நோ கூ. சங்க பொதுமுகாமையாளர். திரு. சோ. அருணகிரி யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வி. எம். பஞ்சலிங்கத்தைக் கேட்டுள்ளார்.

## பலாலி முகாமில் வைத்து அடகு நகைகள் மே 1 முதல் வழங்கப்படும்

[யாழ்ப்பாணம்]

மக்கள் வங்கியின் வடபகுதிக் கிளைகளில் நகை அடகுவைத்தோர், தங்கள் நகைகளை மீளளிக்குமாறுகோரி நடாத்திய மறியல் போராட்டத்தின்விளைவாக மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் நகைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அடகுவைத்தோர் சங்கம் அறிவித்துள்ளது.

முதலாவதாக யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் அடகுவைத்த

[5ம் பக்கம் பார்க்க]

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

பூரண விளைதிறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [C-1837]

நல்ல இன செவ்விளநீர் தென்னம்பிள்ளைகள் விற்பனைக்குண்டு. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். [C 1858]

Morris Minor Car எஞ்சின் (Engine) 1000 Model நல்ல நிலையில் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும்: CITY SHOP, 18/2, விதானையார் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (C1973)

நல்ல நிலையிலுள்ள வாடகைக்கு விடக்கூடிய றிச்சட் பீரிஸ் 150 இரும்புக் கதிரைகள் உடன்விற்பனைக்குண்டு. க. தங்கத்துரை, தேநீர்க்கடை, வியாபாரிமூலை, பருத்தித்துறை. (C 1974)

Chopper Bicycle விற்பனைக்குண்டு. தொடர்பு: 52 [32] அரசடி றோட், யாழ்ப்பாணம். [C 1887]

1986 - அக்ஷய [புதுவருட] எல்லா இராசிப்பலன்களும், ஆத்மஜோதி தத்துவ ஞான விளக்கங்களும் விலை 3/- எங்கும் கிடைக்கும். நூலாசிரியர்: [ஆத்மஜோதி] சத்தியதாஸன், காங்கேசன் துறை. [C-1981]

கறுப்பு இன அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. 51, விதானையார், வீதி, சுண்டுக்குளி. [C-1982]

ஐஸ்கிறீம் பழம் இவை சம்பந்தமானவைகள் தயாரிப்பதற்கான நல்லநிலையிலுள்ள தொழிற்சாலை உபகரணங்கள் உடன்விற்பனைக்குண்டு. காலத்திற்கு ஏற்றதொழில் மேலதிக விபரங்களுக்கு தொடர்பு: கொள்ளவேண்டிய முகவரி. ஒட்டோகூல் எஞ்சினியர்ஸ் யாழ்ப்பாணம். (சாந்திதியேட்டர் முன்பாக.) C 1987

மீசாலை புத்தூர் சந்திக்கு அண்மையில் சியாமளா மில் ஒழுங்கையில் 20 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. திருமதி ஆறுமுகம், வீரசிங்கம் மகாவித்தியாலயம் முன்பாக, புத்தூர் சந்தி, மீசாலை. [C-1955]

வெளிநாடு செல்லும் என்ஜினியரின் குளிர்சாதனப் பெட்டி, அலுமாரி, கட்டில்கள், Vono Spring Beds, Dressing Table, எழுது மேசைகள், Show Case, சாப்பாட்டு மேசைகள், ஹோல் செற்றி, தேக்கு தளபாடங்கள், pyrex Dinner Set, Cut glass, சில்வர் பாத்திரங்கள், கசற் றேடியோ, Iron, கம்பளங்கள் உடன் விற்பனைக்குண்டு. பத்மநாதன், ஆடியபாதம் றோட், திருநெல்வேலிச் சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்கு மிடையில். [C-1953]

அராலி மேற்கில் கிணறு, தென்னை, பனை, மின்சாரவசதிகளுடன் அமைதியான சூழ்நிலையில் 17 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. வீடுகட்ட அல்லது மில் நடாத்தவோ உகந்தஇடம். தொடர்பு: சி. சிவசோதி, அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. [C 1960]

### விற்பனைக்கு

National வீடியோ டெக் NV 2000 EN ரூ 9000/-மாலை 3-6 மணி, ஸ்கந்தராசா, கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. [C 1999]

### FOR SALE

Pure bred Alsation bitch good Watch dog 3 years old, for Sale; reasonable Price. 129, Kachcheri Nallur Road, Jaffna. [C 1978)

### பயிற்சி

Computer Programming (COBOL), றேடியோ, வீடியோ டெக், ரெலிவிஷன் றிப்பியறிங், எலக்றிக்கல் வயறிங், வைண்டிங் ஆகிய தொழிற்பயிற்சிகள் ஆரம்பமாகவுள்ளன. பயிற்சிகள் ஆரம்பம்: 26-04-86 காலை 9-30 மணி. விபரங்கட்கு JAFFNA TECHNICAL INSTITUTE, 52/1, StanleyRoad, (றெயில்வே கடவைக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். (C 1971)

## மணப்பந்தல்

வெளிநாட்டில் நல்ல சம்பளத்துடன் பணிபுரியும் 33 வயதுடைய மணமகனுக்கு 23 - 29 க்கும் இடைப்பட்ட வயதில் மணமகள் தேவை. சாதகக்குறிப்பு ஏனைய முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: C 1995, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 1995]

சாவகச்சேரி
நகராட்சிமன்றம்

### கேள்வி அறிவித்தல்

### சாவகச்சேரிப் பொதுச்சந்தை

15-05-86ந் திகதி தொடக்கம் 31-12-86ந் திகதிவரை சாவகச்சேரிப் பொதுச்சந்தையில் மாதவாடகை அறவிடப்படும் கடைகள், ஊடுகள் ஆகியன தவிர்ந்த ஏனைய நிலவாடகைகளை அறவீடு செய்வதனை குத்தகைக்கு கொடுப்பதற்கான சீல் வைத்த கேள்விகள் 07-05-86ந் திகதி நண்பகல் 12 00மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இதற்காக சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில், மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா 100/-ம், மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணமாக ரூபா 1000/- செலுத்தி 05-05-86ந் திகதி நண்பகல் 12-00மணி வரை பெறப்படும் கேள்விப் பத்திரங்களில் கேள்விகள்சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இக்குத்தகைக்கான ஆகக்குறைந்த கேள்வித் தொகை ரூபா 2,70 000/- ஆகும். சித்திபெறும் கேள்விக்காரர் அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று தினங்களுக்குள் கேள்வித்தொகையின் மூன்றிலொரு பகுதியை (1/3)ச் செலுத்திச் சபையுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மிகுதிப் பணத்தை 31-10-86ந் திகதிக்கு முன்பு சரிசமமான தொகைகளாக மாதாந்தம் செலுத்துதல் வேண்டும். மேலதிக விபரங்களை சாவகச்சேரி நகராட்சிமன்ற காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

த. நவரத்தினராசா,
செயலாளர்,
(தலைவருக்காக)
நகரசபை, சாவகச்சேரி.

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி. [A-618]

### வகுப்புகள்

108, Brown Road, Jaffna, A/L 88 இரசாயனம் ஆசிரியர் - சத்தீஸ். ஆரம்பம்: 25-04-86 வெள்ளி 4-30 P.M. அடுத்த பிரிவு ஆரம்பம்: 26-04-86 சனி 2-15 P.M. விபரங்கள் நேரில். [C-1954]

நீர்வேலியில் பிரத்தியேக ஆங்கில மொழி வகுப்புகள் ஆரம்பம்: 28-4-86 காலை 9 மணி. கற்கைநெறிகள்: G. C. E. O/L Special English, N. C E. TOFEL. தொடர்பு: த. ந. பஞ்சாட்சரம்' நீர்வேலி. [C 1990]

## கல்வி

A/L 87-88 கலை / வர்த்தக வகுப்புக்கள் பிரிவு 'B' ஆரம்பம் 07-05-1986. Modern Education Centre, Karaveddy. [C 1845

## காணவில்லை

எட்டு முக்கிய திறப்புகள் அடங்கிய சாவிக் கோர்வை யாழ். நகருக்குள் (முக்கியமாக ஆஸ்பத்திரி வீதியில்) 2 தினங்களுக்குமுன் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தயவுசெய்து கீழ்க்கண்டவிலாசத்தில் சேர்ப்பிக்கவும். சன்மானம் வழங்கப்படும். ஜீவா (B)பாங்கில் ஸ்டோர்ஸ், 8, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C 1998)

### 46-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



செல்வன் சுப்பையா
உதயபாதம்
(வசந்தன்)

மலர்வு: 23-03-1969

உதிர்வு: 12-03-1986

தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து தமிழ் இனத்தின் விடிவே தன் இலட்சியமெனக் கொண்டு தாராளமனத்துடன் அயராதுழைத்த அன்னாரின் உயிரைக் கயவர் கூட்டம் 12-3-86-ல் முத்திரைச்சந்தை என்னுமிடத்தில் பலிகொண்டது. அன்னாரின் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனைவேண்டுகின்றோம். அன்னாரின் இறுதி ஊர்வலத்தில் பங்குகொண்ட அனைவர்க்கும் இவ்வேளையில் 26-4-86-ல் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் திதியில் பங்கு கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,
திருமதி சுப்பையா
குடும்பத்தினர்.

பாரதி வீதி,
பத்தமேனி,
அச்சுவேலி. C1963


### மின்தடைபற்றிய அறிவித்தல்

1986-ம் ஆண்டு சித்திரை மாதம் 27-04-86 ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணிமுதல் மாலை 16/30 மணிவரை (4½) அவசர திருத்த நிர்மாண வேலைகளுக்காக முல்லைத்தீவு, ஆனையிறவு, பரந்தன், கிளிநொச்சி, மாங்குளம், நெடுங்கேணி ஆகிய பகுதிகளுக்குரிய மின் விநியோகம் தடைப்படும் என்பதை அறியத்தருகின்றேன். இதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காக வருந்துகின்றேன்.

நன்றி

மின்பொறியியலாளர்,
கிளிநொச்சிப்
பிரதேசம்,
மாங்குளம்.
(A 617)

### 31-ம் நாள் நினைவஞ்சலி



சின்னத்தம்பி
சின்னத்துரை

தோற்றம்: 02-04-1938

மறைவு: 27-03-1986

பெற்ற தாயை தவிக்க வைத்து சகோதரங்கள் இரத்தம் கொதிக்க வைத்து கைபிடித்தவளை கதறவிட்டு, கண்ணென இருந்த பிள்ளைகளை துடிக்க வைத்து அன்புப் பேத்திதுஷாவின் தாத்தா சொல் கேட்க மறந்து மருமக்களின் இதயம் நோகவைத்து, சுற்றோர் (வஞ்சகர்) பின்னிய மந்திர வலையில் சிக்கி தன்னைத்தானே தெய்வமாக்கிக்கொண்ட எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா இறைவனடி சேர பிரார்த்திப்போமாக. மீண்டும் இந்த மண்ணில் வந்து தோற்ற வேண்டுமே, வாழ்க வாழ்க என்று எங்களை வாழ்த்த வேண்டுமே.

இறுதிக் கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் பல வழிகளில் உதவிபுரிந்தவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

தாய், மனைவி, பிள்ளைகள்,
சகோதரங்கள், மாமி,
மருமக்கள், பேத்தி,
உற்றோர், உறவினர்,
நண்பர்கள்.

S. சின்னத்துரை,
திருப்பரம் குன்றம்,
புங்குடுதீவு-10.

சரஸ்வதி ஸ்ரோர்,
81/3, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.
C 1937

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

### குடும்பஸ்தருக்கு அடிகாயம்

[வவனியா]

வவனியா நொச்சி மோட்டை என்ற இடத்தில் உள்ள 46 வயதான வே. நவரத்தினம் என்ற குடும்பஸ்தர் இரு இளைஞர்களினால் விசாரணைக்காக அழைத்து செல்லப்பட்டு பலத்த அடிகாயங்களுக்குள்ளானார் என இவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

சிறப்புப் பட்டமாணித் தேர்வு
கலை/வர்த்தகம்
முகாமைத்துவம்
மீள் பரீட்சை
அடிப்படை ஆங்கிலம்
பகுதி I, II
மே - 1986

மேற்குறிப்பிட்ட மீள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் மே மாதம் 15-ம் திகதிக்கு முன்பாக தமது விண்ணப்பப் படிவங்களை அதற்குரிய பணத்தையும் செலுத்திப் பூர்த்திசெய்து சிரேட்ட உதவிப் பதிவாளர், தேர்வுக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். இப்பரீட்சையானது மே மாதம் 31-ம் திகதி முற்பகல் 9 மணிக்கு நடைபெறும்.

-- பதிவாளர்.

[A 621]

### 1-வது ஆண்டு நினைவஞ்சலி



குகநேசன்
குமரேசன்
(ரவி)

ஆண்டவன் படைப்பு:
28-07-1966

ஆழ்பவன் அழிப்பு:
26-04-1985

அன்புடனும் பாசத்துடனும் வாழந்து எம்மை எல்லாம் பெருமை சொள்ளச் செய்து திடீரென எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மறைந்துவிட்ட அன்புச் செல்வமே. உனது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிராத்திக்கிறோம்.

உன்பிரிவால் வாடும்:

ஐயா, அம்மா,
சகோதரி, சகோதரர்கள்,
கண்டி அப்பா,
அம்மம்மா, மாமாமார்,
மாமிமார் பிள்ளைகள்,
அன்ரி, சித்தப்பா,
தம்பி ரம்யன், மற்றும்
உனது ஆப்த நண்பர்கள்.

வியாபாரி மூலை,
பருத்தித்துறை.
C 1975

# 1990-ம் ஆண்டுவரை பாகிஸ்தானில் பொதுத்தேர்தல்கள் இல்லை

## ஜெனரல் ஹக் அறிவிப்பு

இஸ்லாமாபாத், ஏப் 25

**“1990-ம் ஆண்டுவரை பாகிஸ்தானில் பொதுத் தேர்தல்கள் எக்காரணம் கொண்டும் நடத்தப்படமாட்டா. தற்போதைய பாகிஸ்தான் அரசாங்கம் தொடர்ந்து பதவியில் இருப்பதற்கான அதிகாரத்தை பாக். மக்கள் கடந்த ஆண்டில் இடம்பெற்ற சர்வஜன வாக்கெடுப்பில்வழங்கியுள்ளார்கள்” என்று பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் ஷியாவுல்ஹக் தெரிவித்துள்ளார்.**

பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவியும், முன்னாள் பாகிஸ்தான் ஜனாதிபதியுமான பூட்டோவின் மகள் செல்வி பெனாஸிர் பூட்டோவின் பிரசாரங்களுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே மேற்கண்டவாறு ஜெனரல் ஹக் கருத்து வெளியிட்டுள்ளார்.

பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஹக் பதவி விலகவேண்டுமெனவும், பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டு ஜனநாயக ஆட்சிமுறை அமுல் செய்யப்பட வேண்டுமெனவும் செல்வி பெனாஸிர் பூட்டோ பாகிஸ்தானில் தாம் கலந்து கொள்ளும் பொதுக் கூட்டங்களில் கூறிவருகிறார்.

ஜெனரல் ஹக்கின் ஆட்சியை அவர் கடுமையாக விமர்சித்து வருகிறார். பாகிஸ்தான் மக்களின் ஆதரவு தம் பக்கம் இருப்பதாகவும், தம்மால் ஒரு புதிய ஆட்சியை அமைக்க முடியும் எனவும், எனவே ஜெனரல் ஹக்கிடம் பொதுத் தேர்தலை நடத்தும்படி அவர் பகிரங்க வேண்டுகோள்களை விடுத்துவருகிறார்.

ஜெனரல் ஹக் செல்வி பெனாஸிருக்குப் பதிலளிக்கையில், “பாகிஸ்தானில் புதிய ஆட்சிக்கு அவசியமேதுமில்லை மக்கள் தற்போதைய ஆட்சியை ஏற்றுள்ளார்கள்.

கடந்த ஆண்டில் நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பில் தற்போதைய அரசாங்கம் தொடர்ந்து பதவியிலிருப்பதற்கான அதிகாரத்தைப் பாகிஸ்தான் மக்கள் வழங்கியுள்ளார்கள்.



செல்வி பெனாஸிர் பூட்டோ ஜனநாயகம்பற்றிப் பேசுகிறார். ஆனால் அவரது தந்தையார் சுல்பிகார் அலி பூட்டோவின் ஆட்சியில் ஜனநாயகம் சீர்கெட்டிருந்ததை பாகிஸ்தான் மக்கள் மறந்துவிடவில்லை” என்றார். [கி]

உலகச் செய்திகள்

---

சிறுவன் மரணம்:

## லொறியும் சாரதியும் பிணையில்

[யாழ்ப்பாணம்]

கைதடி லொறி விபத்தில் ஞானசேகரசர்மா என்ற 13 வயதுச் சிறுவன் பலியான சம்பவம் தொடர்பாக யாழ் நீதிமன்றத்தால் ஆஜர் செய்யப்பட்ட சந்தேக நபரான லொறிச்சாரதி என். நாகரத்தினம் 2000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப் பட்டதுடன் லொறி ஒரு லட்சம் ரூபா பிணையில் விடப்பட்டது.

விசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி ஏ. அன்ரனி லொறியுடன் சாரதியை, யாழ். நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பணித்திருந்தார்.

யாழ் நீதிமன்றத்தில், நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் மேற்படி லொறிச் சாரதி ஆஜர் செய்யப்பட்டிருந்தார்.

லொறியை ஒரு லட்சம் ரூபா பிணையில் எடுத்துசெல்ல அனுமதித்தது. தேவையான போது லொறியை நீதிமன்றத்திற்குக் கொண்டு வருமாறும் பணத்து சந்தேக நபரை 2000 ரூபா பிணையில் செல்ல நீதிபதி அனுமதித்தார். [க]

---

உலகின்

## உயர்ந்த கட்டிடத்திலிருந்து பாரசூட்டில் பாய்ச்சல்!

நியூயோர்க், ஏப்-25

உலகின் அதி உயர்ந்த கட்டிடமான ‘எம்பயர் ஸ்டேட்’ கட்டிடத்திலிருந்து இரு பிரிட்டிஷ் வாலிபர்கள் பாரசூட்மூலமாக நிலத்தில் குதித்தனர். இவர்களில் ஒருவர் பின்னர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த ‘எம்பயர் ஸ்டேட்’ கட்டிடம் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அமைந்துள்ளது. இதன் உயரம் ஆயிரத்து ஐம்பது அடிகளாகும்.

இக்கட்டிடத்தின் 86-வது மாடியிலிருந்தே அந்த பிரிட்டிஷ்காரர்கள் இருவரும் நிலத்தில் பாரசூட் மூலமாகக் குதித்தனர்.

இக்கட்டிடத்தின் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு டிமிக்கி கொடுத்த பின்னர் இந்த இருவரும் தமது பாய்ச்சலை மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நிலத்தில் குதித்ததும் அப்பாய்ச்சல்காரர்களில் ஒருவர் டாக்ஸி ஒன்றை மறித்துத் தப்பிச் சென்றுவிட்டார் எனவும், மற்றவர் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

முரட்டுத்தனமான முன்னறிவித்தலற்ற செயலை மேற்கொண்டதாகக் கைதானவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு பாரிஸின் ஈபெல் கோபுரத்திலிருந்தும் இவர் நிலத்தில் பாய்ந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

---

## றீகன் - அக்கினோ தொலைபேசி உரையாடல்

வாஷிங்டன், ஏப் 25

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி திருமதி கொராஸோன் அக்கினோவுடன் தொலைபேசி மூலமாக அமெரிக்க அதிபர் திரு. றீகன் நேற்று உரையாடினார்.

கடந்த பெப்ரவரி மாதம் திருமதி. அக்கினோ ஆட்சியைக் கைப்பற்றியதையடுத்து திரு. றீகன் அவருடன் மேற்கொண்ட முதலாவது உரையாடல் இதுவென்று தெரிவிக்கப்பட்டது.

திருமதி. அக்கினோவுடனான இந்த உரையாடலில் பிலிப்பைன்சுக்கு அமெரிக்கா தொடர்ந்து உதவி வழங்கும் என்று திரு. றீகன் உறுதியளித்தார்.

பிலிப்பைன்சுக்கான 150மில்லியன் டாலர்கள் அமெரிக்க உதவி குறித்து அமெரிக்கக் காங்கிரஸில் ஆராயப் படுவதாகவும் அவர் கூறினார். இந்த உதவியில் 100 மில்லியன் டாலர்கள் பொருளாதார உதவியாகவும், 50 மில்லியன் டாலர்கள் இராணுவ உதவியாகவும் இருக்குமென்று திரு. றீகன் குறிப்பிட்டார்.

திருமதி. அக்கினோ பதிலளிக்கையில், பிலிப்பைன்ஸின் பொருளாதாரம் மிகவும் நலிவடைந்திருப்பதாகவும், மார்க்கோஸ் ஆட்சிக் காலத்தில் அமெரிக்கா வழங்கிய உதவிகள் மார்க்கோஸின் சொந்த வாழ்க்கைக்கே செலவானதாகவும் அவர் மேலும் கூறினார். (கி)

---

## தடுப்புக் காவலில் இருந்தவர் விடுதலை

(கிளிநொச்சி)

கடந்த இருவருடங்களுக்கு மேலாக பயங்கரவாததடைச் சட்டத்தின் கீழ் கைதாகி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த கிளிநொச்சியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தரான திரு. ஞானப்பிரகாசம் ஞானராசா இரு வாரகால சிறைத் தண்டனையின் பின் விடுதலையானார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விடுதலையான ஞானராசா வேலணையில் உதவிக் கிராமஅபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றுகையில் ஆயுதப்படையினரால் கைதானார்.

மட்டக்களப்பு சிறைஉடைப்பின்பின்னர் சிலருக்குப் புகலிடம் வழங்கியதாக இவர் மீது குற்றஞ்சாட்டப் பட்டிருந்ததாம்.

---

## பிரான்ஸின் மத்தியதரை பாதுகாப்பு அதிகரிப்பு!

பாரிஸ், ஏப்-15

லிபியா மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதலைத் தொடர்ந்து பிரான்ஸ் அதன் மத்தியதரைக்கடல் வலயப் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளது

மத்தியதரைக்கடற் கரையோரத்தை அண்டிய தனது இராணுவ நிலையங்களில் விமான எதிர்ப்புப பீரங்கிகள், ஏவுகணைகள் என்பனவற்றைப் பிரான்ஸ் மேலும் பலம்வாய்ந்த முறையில் பொருத்தி வைத்துள்ளது

இத்துடன் நவீன ‘ராடர்’ சாதனங்களும் இக்கடலோரப் பாதுகாப்பு வலயத்தில் நிறுவப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

லிபியா மீதான அமெரிக்க விமானத் தாக்குவலையடுத்து மத்தியதரைக் கடற்பகுதியில் போரபாயம் ஏற்படும்அறிகுறிகள் தென்பட்டன. இதனையடுத்தே பரானஸ் அதன் பாதுகாப்பை வலுப்படுத்தியுள்ளது

இதேவேளை ஐரோப்பிய சமூக நாடுகள் பயங்கரவாதத்திற்கு எதிராகத் தீவிரமாகச் செயற்பட முன்வந்துள்ளன. இச்சமூக நாடுகள் சில நேற்று நடத்திய மகாநாடொன்றையடுத்து பயங்கரவாதத்திற்கு எதிராக அமெரிக்காவுடன் சேர்ந்து செயற்படுவதெனவும் முடிவுசெய்துள்ளன. [கி]

---

## குடமுழக்கு விழா

[வவுனியா]

வவனியா வெளி வட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் புதிதாக அழகுற அமைக்கப்பெற்றுள்ள மணிக் கூட்டுக் கோபுர குடமுழுக்கு விழா அண்மையில் மிக சிறப்பான முறையில் நடைபெற்றது.

---

## “தொழிற்சங்கம் அமைத்து போராடுவது தொழிலாளி கடமை”

[யாழ்ப்பாணம்]

“தொழிற்சங்கங்கள் அமைத்து அதன் மூலம் தங்கள் ஜீவாதார உரிமைகளுக்காக போராடுவது தொழிலாளவர்க்கத்தினது ஜீவாதார உரிமை. இதனை எந்த நிர்வாகியும் உதாசீனம் செய்துவிட முடியாது இதனை தட்டிக் கழிக்கும் முதலாளி தனக்கே ஆபத்துக்களைவலிய தேடிக் கொள்கின்றார் என்பதை உணரவேண்டும்.”

இவ்வாறு இலங்கை தொழிற் சங்கங்களின் சம்மேளனத்தின் வட- பிரதேச செயலாளரும் தொழிற்சங்க கூட்டுக்குழுக்களின் அமைப்பாளருமான திரு எஸ். விஜயானந்தன் கூறினார்

இலங்கை தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் தொழிற்சாலைக்கிளைகளின் உத்தியோகத்தர்கள் கூட்டம் கிளைத்தலைவர் திரு. அவைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்றது. அக் கூட்டத்தில் பேசிய திரு எஸ் விஜயானந்தன் மேலும் “யாழ் மாவட்டத்தில் சிவில் நிர்வாகம் இல்லை என்று சொல்லப்படுகின்றது அப்படியிருந்தும் கூட தொழிலாளர்கள் தங்களால் இயனறளவு கடமைகளைச் செய்து வருகின்றார்கள்.

நான்கு மாதங்களுக்கு முன்பு காங்கேசன்துறையிலுள்ள லங்கா சிமெந்து லிமிடெட் கம்பனியில் தொழிலாளர்கள் எமது தொழிற்சங்க கிளையை அமைத்தனர் ஆனால் இதுவரை நிர்வாகம் அதனை அங்கீகரிக்கும் அறிகுறிகளோ தெரியவில்லை. இதனால் தொழிலாளவர்க்கத்தின் பொறுமையை நிர்வாகிகள் சோதிக்கின்றார்கள் என்பது தான் அர்த்தம். இதற்கு திட்டவட்டமான முடிவுகாண இம்முறை நடைபெறும்மேதினத்துடன்யாழ் மாவட்டத்திலுள்ள தொழிலாளர்கள் அனைவரும் தயாராகவேண்டும். தொழிலாளவர்க்கத்தை அசட்டை செய்து சீரான நிர்வாகத்தை நடத்த முடியாது என்பதை சரித்திரம் நிரூபித்துள்ளது.”

தொழிற்சங்கங்களும் வெகுஜன அமைப்புகளும் இணைந்து நடாத்தும் மேதின ஊர்வலத்திலும் பொதுக்கூட்டத்திலும் பங்கு கொள்வதுடன் அதன் வெற்றிக்காகவும் செயல்படுவதென்றும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## மணி வாக்கு

''அடிமைத்தனத்தை ஏற்றுக்கொண்டு கோழையாக இருப்பதைவிட அதனை எதிர்த்து ஆயுதப் போரில் ஈடுபடுபவர்களை நான் மதிக்கிறேன்.''

—மகாத்மாகாந்தி.

## நமது நோக்கு

# இன்று தமிழ்த் தலைவர்கள் உயிர்த்தெழுந்தால்

தந்தை செல்வா சிராத்த தினமாகிய இன்று இலங்கையில் தமிழர் பிரச்னை ஒன்று உருப்படியாக இருக்கின்றதென்று உலகுக் கெடுத்துக் காட்டிய இரு பெருந் தலைவர்கள் ஜீ ஜீ. பொன்னம்பலமும் எஸ். ஜே. வி. செல்வநாயகமும் என்பதை இன்று எவரும் ஆட்சேபிக்கத் துணியார்.

மக்கள் நினைப்பதுபோல் தலைவர்கள் வாதாடுவது போல் விடயங்கள் நிறைவேறுவதில்லை. மகாத்மா காந்தி உயிருடன் இருக்கும் போதே பாகிஸ்தான் உதயமானது. இந்திய சுதந்திர பிரகடனத் தினத்தன்று (15-9-47) நவகாளியில் நடைபெற்ற இரத்தக் களரியை நிறுத்தக் கால்நடையில் சென்றவர் மகாத்மா.

ஒற்றை ஆட்சியில் தமிழ் மக்கள் பாகுபாடின்றி, பாதுகாப்பாக வாழவேண்டுமென்று சோல்பரி கமிஷன் முன் வாதாடிய ஜீ. ஜீ., அது வாய்க்கவில்லையென்றதும் இங்கிலாந்து சென்றும் தம்மாலியன்றமட்டும் மிகச் சாதுர்யமாகப் போராடியதற்கு அன்று பெருஞ் செல்வாக்கிலிருந்த இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வரலாறு சான்றளிக்கும்.

ஒற்றையாட்சி ஒழிய வேண்டும்; சமஷ்டி முறையே சரியானதென்று தம் வாழ்நாள் முழுதும் போராடித் தமிழ் பேசும் மக்களைப் பெருமளவிற்கு ஒற்றுமைப் படுத்தியவர் தமிழரசுத் தலைவர் எஸ். ஜே. வி.

இவ்விரு பெருந் தலைவர்கள் வேறுபட்ட வழிகளைக் கையாண்ட போதும் இலங்கைத் தமிழர் பிரச்னை சுமுகமாக தீரவேண்டுமென்று அரசுடன் அஹிம்சை முறையில் பெரும் போராட்டங்களை நடத்தியதை நாம் இவ்வளவு விரைவில் மறந்து போகலாகாது.

தமிழர் தலைமைத்துவத்திற்கு கட்சி அடிப்படையில் ஏற்பட்ட பிணக்குகள் வரலாற்று ரீதியில் பார்க்கும் போது தவிர்க்க முடியாதவை என்று சமாதானஞ் செய்ய வேண்டியிருக்கிறது.

இன்று எதுமுக்கியமென்பதை நாம் அனுபவித்த, அனுபவித்துக் கொண்டிருக்கிற துன்பங்கள் தோல்விகள் விளக்கவேண்டும்.

தமிழரைப் பிரித்து ஆள முயன்ற இலங்கை அரசு, தலைவர்களையும் அவர்களின் கட்சிகளையும் பீடித்திருந்த வேறுபாடுகளைப் பயன்படுத்தி பிரச்னையைத் திரித்து காலம் தாழ்த்தியது இன்று பிரத்தியட்சம்.

அதனை இன்று மனதில் கொள்வது நலம். வரலாற்றின் பாடத்தை படிக்கத் தவறும் எவரும் அந்தப் பாடத்தை திரும்பப் படிக்கும் தண்டனைக்குள்ளாவர் என்பதை நாம் இன்று நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

சிறிலங்கா இரண்டாவது தடவை ஆட்சிக்கு வந்த போது 'கடவுள் தான் தமிழ்மக்களைக் காப்பாற்ற வேண்டு'மென்ற விரக்தி நிலையை வெளிப்படுத்திய வர் தெய்வபக்தி நிறைந்த தந்தை செல்வநாயகம். தலைவர்கள் இருவரும் ஜீ ஜீ யும், எஸ் ஜே.வி யும் இறக்கும்வரைக்கும் ஆட்சியிலிருந்த சிறிலங்கா அரசு தமிழர் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசவே மறுத்துவிட்டது.

'சிங்களம்' மட்டும் என்ற சட்டத்தை ஒருபோதும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்ற தீர்க்க தரிசனம் வழங்கிய ஜீ ஜீ யும், அதனைத் தமிழ் பாடசாலைகளில் கற்பிக்காது தடுக்க தலைவர்கள் இருவரும் ஒற்றுமைப் பட்டதை நாம் இன்று நினைவு கூருவதோடு அவர்களின் தலைமைத்துவத்துக்கு அஞ்சலி செலுத்த வேண்டும்.

கட்சி ரீதியில் எழுந்த பிரிவினை இன்று குழி தோண்டிப் புதைக்கவேண்டியது. தமிழர் பிரச்னை பூரண ரூபம் எடுத்ததற்கு சிங்களத் தலைவர்கள்-இந்த நாடு சிங்கள மக்களுக்கே உரியதென்ற நச்சுப்பாம்பை ஆட்டிவரும் தலைவர்கள்-பெரும் பங்கையேற்கவேண்டும்.

இன்று நடைபெறும் போரை இன்னொரு உலகத்திலிருந்து வரும் என்றும் அழியாத தலைவர்கள் இருவரும் எவ்வாறு மதிப்பிடுவார்கள்.

பேச்சுக்கோ, அதிசயத்துக்கோ, அதிர்ச்சிக்கோ இடமெதுவுமில்லாத பிரதேசத்திலிருந்து வரும் கண்ணியம் மிக்க தலைவர்கள் தங்களுடைய இளம் வாரிசுகள் வெளுத்துவாங்குகிறார்கள்; என்றும் எதிர்பாராத வீரச்செயல் பேஷ், பேஷ் என்று சொல்வது நிச்சயம்.

கோழைத்தனம் என்னவென்று தெரியாத பெருந் தலைவர்கள் போராடிய விதம் வேறு, அன்றைய உலகம் வேறு, இன்று இதுவே தவிர்க்க முடியாத வழி என்பதை ஏற்றுக் கொள்வார்கள்.

ஒரே ஒரு எச்சரிக்கை! ''எங்களைப் போல் வேறுபாடுகளை மாறுபாடுகளாகக்கொண்டு எதிரிக்கு இடமளிக்காதீர்'' என்று சொல்வது நிச்சயம்.

## நியமனம்

[வண்ணார்பண்ணை]

யாழ்.மாவட்ட அபிவிருத்திச்சபையின் மண்டைதீவு உபஅலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராக திரு. ஆர். டி. பூபாலரத்தினம் இம்மாதம் முதல் பதவி ஏற்றுள்ளார். நீண்டகாலம் உள்ளூராட்சி இலாக சேவையில் கடமையாற்றிய இவர் யாழ்.மாவட்டச் செயலகத்திலிருந்து மண்டைதீவு உப அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.



# தந்தை செல்வா சென்ற பாதை

மட்டுவில் ஆ. நடராசா

விடுதலை தவறிக்கெட்டு, மூன்று நூற்றுண்டுகளுக்கு மேலாக அடிமை வாழ்வு வாழ்ந்து, தாளெரு தனியினம் என்பதைத் தமிழன் மறந்திருந்த காலமது. பிரதேச மத இன பேதங்கள் பீடித்திருந்த எம்மினம், எதிர்பாராமல் 1948ல் வீசிய விடுதலைக் காற்றுல் ஒருவித மயக்கத்தில் ஆழ்ந்தது.

அன்னியர் ஆட்சியிலிருந்து விடுபட்டு ஆண்டொன்று கூடக் கழியவில்லை. இலங்கைப் பிரசாவுரிமைச் சட்டம், பாராளுமன்றத் தேர்தற் திருத்தச் சட்டம் முதலிய சட்டங்கள் பாராளுமன்றத்துக்குக் கொண்டுவரப்படுகின்றன. அரசியல் வாழ்விற் பிரவேசித்து ஆண்டொன்றுதான் கழிந்த அரசியல் வாதியான திரு சா. ஜே. வே. செல்வநாயகம், அச்சட்டங்களை எதிர்த்தார். ''மலையகத்தில் வாழும். இம்மக்கள் எமது இனத்தவர். இன்று இவர்களின் உரிமை பறிக்கப் படுகிறது. இல்விதமே நாளை நாமும் அழிக்கப்படுவோம். எனவே நாம் ஒன்று பட்டு, இனப்பாகுபாடு காட்டும் இச் சட்டத்தை எதிர்ப்போம்'' என்றுர் அவர். அன்று அவரின் குரல் எமது செவிகளில் ஏறவில்லை.

இருந்தும். 'சொற்கேளாப் பிள்ளைகள் எக்கேடாவது கெட்டுப் போகட்டும் என எண்ணித் தந்தை எம்மை விட்டுவிடவில்லை. ''எமது பாரம்பரிய மண் அபகரிக்கப் படுகிறது மொழியுரிமை பறிக்கப்படும். இது போலஇன்னும் பல உரிமைகளும் பறிக்கப் பட்டு இறுதியில் நாம் அழிக்கப்படுவோம்'' என எச்சரித்தார். எம்மினத்தை அழிவிலிருந்து காப்பாற்ற வழிகாட்டினுர்.

'வாழு வாழவிடு' என்னும் இலட்சியத்தின் அடிப்படையில் சமஷ்டி அமைப்பின் கீழ் தமிழரசு ஒன்றை அமைப்பதையே தமது கொள்கையாகக் கொண்டு தமிழரசு கட்சியை அமைத்தார்.

1956ல் பாராளுமன்றத்தில் சிங்களம் மாத்திரஞ் சட்டம் கொண்டு வரப்பட்ட போது அதை எதிர்த்து காலிமுகத் திடலில் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டார். தந்தை செல்வா அதைத் தொடர்ந்து வாகன இலக்கத் தகடுகளில் 'சிங்கள சிறீ' புகுத்தப்பட்டபோது அதை எதிர்த்து தந்தை சிறை சென்றுர்.

1956ல் திருமலை யாத்திரை நடத்தி, தமிழினத்தை ஒன்றிணைத்து திருமலைத் தீர்மானத்தை நிறைவேற்றி தமிழின விடுதலை போராட்டத்தைப் பிரகடனப் படுத்தினுர் இப் பிரகடனம் 1957ல் 'செல்வா-பண்டா' ஒப்பந்தம் உருவாக வழிவகுத்தது.

1957ல் செல்வநாயகம் அவர்களோடு செய்த ஒப்பந்தத்தை 1958ல் அன்றைய பிரதமர் பண்டாரநாயக்கா கிழித்தெறிந்தார் வவனியாவில் தமிழரசுக் கட்சியின் மாநில மாநாடு நடைபெற்றது அம் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு மட்டக்களப்பில் இருந்து வந்தவர்கள் தாக்கப்பட்டனர். நாடெங்கும் இனக்கலவரம் பரவியது. தமிழர் இனவெறியர்களால் கொலை செய்யப் மட்டனர். தந்தை செல்வாவும் அவரது கட்சிப் பிரமுகர்களும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்

1961ல் வடக்குகிழக்கு மாகாணங்களிலுள்ள கச்சேரிகளுக்கு முன்பு நடைபெற்ற மறியல் போராட்டத்துக்கும், சட்ட மறுப்புத் தபால் முத்திரை வெளியீட்டுப் போராட்டத்துக்கும் தந்தை செல்வா தலைமை தாங்கினுர். அப்பொழுதும் போராட்டதை முறியடிக்கப் பலாத்காரத்தைப் பிரயோகித்த அரசு தந்தையையும் அவரின் கட்சியைச் சேர்ந்தவர்களையும் மீண்டும் தடுப்புக் காவலில் வைத்தது

1965ம் ஆண்டில்தமிழ்பேசும் மக்கள் தமது கட்சிக்கு அளித்த ஆதரவைப் பயன் படுத்தி திரு செல்வநாயகம் 'டட்லி-செல்லா' ஒப்பந்தத்தைச் செய்தார். அவ்வொப்பந்தமுஞ் செயற்படுத்தப்படவில்லை.

தமிழர் ஐக்கிய முன்னணியை அமைத்து, அரசியல் யாப்பில் தமிழ் பேசும் மக்களின் ஒன்றுபட்ட குறைந்த பட்சக் கோரிக்கைகளையாவது இடம் பெறச் செய்யும் தனது முயற்சியும் பயனற்றுப் போகவே, 1972 ம் ஆண்டில் அரசியல் யாப்பைத் தந்தை தீயிலிட்டார். 1972-10-02 ல் தனது தேசியஅரசுப் பேரவை உறுப்பினர் பதவியை துறந்து இடைத் தேர்தலை ஏற்படுத்தினுர். அரசு இடைத் தேர்தலை நடாத்தாது காலங் கடத்தியது 1975 ல் நடைபெற்ற இடைத் தேர்தலில் தந்தை தனி நாட்டுக் கோரிக்கையை முன் வைத்துத் தேர்தலிற் போட்டியிட்டு வெற்றி பெற்றுர்.

அதன் பின் 1975-11-20ல் தேசிய அரசுப் பேரவையில் தந்தை ஆற்றிய உரை அவரின் தலைமை தாங்கும் ஆற்றலுக்கும் தமிழீழ அரசை மீளமைக்கும் இலட்சியப் பாதையில் தமிழ் மக்கள் தன்னைப் பின் தொடருவரென அவர் கொண்டிருந்த மன உறுதிக்கும் சான்று பகிர்வதாக அமைந்தது. அவர் தனது உரையில் ''எங்கள் நாட்டை அமைத்து, எங்கள் சொந்த வரவு செலவுத் திட்டங்களை அங்கு விவாதிப்போம் எமது நாட்டின் பொருளாதார வளம் எப்படியிருந்தாலும் பொருளாதார ரீதியில் நாம் கஷ்டப்பட நேர்ந்தாலும் கூட எமது தனித்துவத்தை இழப்பதிலும் அவற்றை மகிழ்ச்சியோடு ஏற்கத் தயாராக இருக்கிறேம்'' என்று கூறினுர்.

1976. 05 14 ல் வட்டுக்கோட்டைத் தொகுதியில் ஆரம்பமான தமிழர் ஐக்கிய முன்னணியின் 1 வது தேசிய மாநாடு ஸ்தாபனத்தில் பெயரைத் தமிழர் விடுதலைக் கூட்டணியாக மாற்றியது. அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றின் இறுதிப் பகுதி ''தமிழ்த் தேசிய இனத்தின் இறைமையையும் விடுதலையையும் வென்றெடுப்பதற்கான ஓர் செயற்றிட்டத்தைத் தயாரித்து திருகோணமலையில் ஜூலை மாதத்தில் நடைபெறவிருக்கும் மாநாட்டில் சமர்ப்பிக்குமாறும் போராட்டத்தை விரைவில் ஆரம்பிக்குமாறும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக் குழுவைப் பணித்தது

குடியரசு த்தின மாத 1976 05 - 22ல் அவசரகால சட்டவிதிகளைமீறி, அச்சிடப்பட்ட ஆயிரக்கணக்கான வட்டுக்கோட்டைத் தீர்மானப் பிரதிகளைத் தந்தையின் தலைமையிலான குழு விநியோகம் செய்தது. இந்நிகழ்ச்சி ''ட்ரயல் அற்பார்'' நீதிமன்ற விசாரணை நடைபெறக் காரணமானது. இவ்விசாரணையையும் தந்தையின் தலைமையிலான வழக்கறிஞர் குழு தமிழீழ விடுதலைப் பிரசாரத்துக்குரிய களமாகப் பயன்படுத்தியது.

திட்டமிட்டபடி திருகோணமலையில் நடைபெற்ற தமி

(5ம் பக்கம் பார்க்க)

# யாழ். செயலக முன்றலில் குருநகர் மக்கள் மறியல்

[சுண்டுக்குளி]

குருநகர் தொடர்மாடிக்கட்டிடத்தில் குடியிருக்கும் சுமார் 400க்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும் தாம் குடியிருக்கும் வீடுகளுக்கு தண்ணீர் வசதி, மின்சாரவசதி முதலியன இல்லை என்றும் இதனுல் தாம் மிகவும் கஷ்டப்படுவதாக யாழ். செயலகத்தின் முன்பாக இருபதுக்கு மேற்பட்ட சுலோக அட்டைகளை தாங்கியவண்ணம் யாழ் செயலகத்தின் முன்பாக நேற்று காலை மறியல்செய்தார்கள்.

இவர்களது சுலோகங்களில் பின்வரும்வாசகங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

★ குடியிருப்பாளர்கட்கு வீடு வழங்கியதுடன் உங்கள் கடமை முடிந்சதா? ★ குடிநீர் வழங்க நீர் இல்லை. இருள் அகற்ற மின் விளக்கில்லை. ★ வீடு வழங்கப்பட்டதுபெயருக்கா அதிகாரசபை புகழுக்கா? ★ அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு எங்கே, ஒரு வீடு பூர்த்தி. ★ மாடி வீடுகள் எல்லாம் ஓட்டை. ஏழைகள் வாழும் இடமெல்லாம் சேவைகள் செய்வது யார்? இப்படியான வாசகங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

செயலகத்திற்கு கடமைக்கு வந்த ஊழியர்கள் உள்ளே செல்லமுடியாதுவெளியில்நின்றுர்கள் காலை8-30மணியளவில் யாழ். பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. ரி. குலசேகரம் இவர்களுடன் கலந்துரையாடி அரச அதிபர் வந்ததும் உங்கள் விடயம்பற்றி நடவடிக்கை எடுக்க ஆவன செய்யவேன் என கூறியதை தொடர்ந்து ஊழியர்களை உள்ளே செல்ல அனுமதித்தார்கள்.

குருநகர் தொடர்மாடி அபிவ்ருத்திச் சபை செயலாளர் திரு ஏ. சி ஏணஸ்ட், அபிவிருத்திச்சபைத் தலைவர், பொருளாளர், குடியிருப்பாளர்கள் கொண்ட குழு யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்தை சந்தித்தது. அங்கே தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஆணையாளர் திரு. எஸ். முருகையா மற்றும் பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. ரி. குலசேகரமும் உடன் இருந்தனர். இது பற்றி யாழ். அரச அதிபர் கொழும்பிலுள்ள தேசியவீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையுடன் தொலைபேசிமூலம்தொடர்புகொண்ட பின் எதிர்வரும் புதன்கிழமை இதுபற்றி முடிவுசொல்வதாக உறுயளித்ததைத் தொடர்ந்து இவர்கள் கலைந்துசென்றனர். குருநகர் தொடர்மாடி அபிவிருத்திச்செயலாளரினுல்அரச அதிபரிடம் மகஜர் ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டது. இத் தொடர்மாடிமுன்பு இராணுவ முகாமாக இருந்ததென்பது குறிப்பிடத்தக்கது,

# தந்தை செல்வா சென்ற....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

மூர் விடுதலைக் கூட்டணியின் சிறப்பு மாநாடு, சிந்தையாலும், சொல்லாலும், செயலாலும் சுதந்திர சோஷலிஸ தமிழீழம் காணும்வரை இடையீடின்றித் தம்பங்கைச் செலுத்துமாறு தமிழ்த் தேசிய இனத்தைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் அழைப்பு விடுத்தது. தந்தையின் தலைமையில் தொண்டர்கள் தடையைமீறி நீதிமன்றங்களிற்கூட கூட்டணிப் பிரசுரங்களை விநியோகித்தனர். அரசு தொடர்ந்து சட்டத்தை மீறுவோரைக் கைதுசெய்வதைக் கைவிட்டது. இதுவே தந்தை பங்கு பற்றிய இறுதிப் போராட்டமாகும்.

தந்தையோடு ஒப்பந்தம் செய்த இந்நாட்டின் இரு பெரும் அரசியற்கட்சிகளின் தலைவர்களும் ஒப்பந்தத்தை நிறைவேற்றாது விட்டு, இனப் பிரச்னையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கத்தவறி, தங்களது இயலாமையை வெளிப்படுத்தி தாங்கள் நம்பிக்கைக்குரியோர் அல்லர் என்பதை நாடறியச் செய்தனர். தந்தையோ தமிழினம் தனிக்கலாச்சாரமும் நாடும் மொழியும் உள்ள இனமென்பதை அவர்களை ஒப்புக் கொள்ள வைத்ததுடன் சிங்கள தலைவர்களை நம்பி அவர்களோடு ஒப்பந்தஞ் செய்வதிற் பிரயோசனமில்லையென்பதையும், தமிழர் தம் உரிமையைப் பெறுவதற்குப் போராட்டமே வழி என்பதையும் இவ்வொப்பந்தங்களின் மூலம் தன்னின மக்களுக்கு உணர்த்தினர்.

1976-11-19ல் தந்தை செல்வநாயகம் தேசிய அரசுப் பேரவையில் ஆற்றிய உரையின் பின்வரும் பகுதிகள் அவர்பெற்ற அரசியல் அனுபவத்தின் திரட்சியாகவும் அவர் தமிழினத்துக்கு விட்டுச் சென்ற மரணசாசனமாகவும் அமைகிறது. அவ்வுரையின் சில பகுதிகள் வருமாறு:

''நாம் சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டோம் நமது நடவடிக்கைகள் அகிம்சை அடிப்படையிலேயே அமையும்.

தனிநாட்டை அமைக்கும் இலட்சியத்தைநோக்கி எங்கள் இயக்கம் முன்னேறுகிறது. தனிநாடு அமைப்பது சுலபமான காரியமல்ல. அது மிகவும் கஷ்டமான காரியம். அது கஷ்டமானதென்பது எங்களுக்குத் தெரியும். நாம் சிங்கள ஆதிக்கத்திலிருந்து வெளியேற வேண்டும்; அல்லது அழிய வேண்டும். இது உறுதியானது எனவே நாம் தனிநாட்டை அமைக்க முயற்சிப்போம்.

சிங்கள மக்கள் அவர்களது தலைவர்களை எம்முடன் எந்தவொரு தீர்வுக்கும் வருவதற்கு அனுமதிக்கப்போவதில்லை. அதனால் எமது பிரச்னைக்குப் பேச்சுவார்த்தைமூலம் தீர்வு காண்பது என்ற பேச்சுக்கே இடமில்லை.

## வவனியா...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

துப்பாக்கியைப் பலவந்தமாக பறித்து உட்பிரவேசித்து அனைவரையும் நிலத்தில் படுக்குமாறுகூறி இக்கொள்ளையை நடத்தினராம்.

கொள்ளையை முடித்துவிட்டு வெளியேறுகையில் வங்கிபாதுகாப்பு ஊழியர்களுக்கும் இவர்களுக்கும் இடையில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் இருபகுதியினருக்கும் எதுவித காயமும் ஏற்படாத போதும் வங்கிக் கண்ணாடிகள் சேதமடைந்தன. (பி)


## கடைசிநேர வரிவிளம்பரம்

**WANTED**

Wanted annexe for a Middle aged couple outside Jaffna town. Advt:No. 2012 C/o Eelanadu Ltd. Jaffna.
2012

உள் ஆடைகள் தைப்பதற்கு அனுபவமுள்ளவர்கள் தேவை. நேரில் வரவும். ஷோபா காமென்ஸ், 319, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
C2007

கல்வி, மியூசிக்துறை சார்ந்த நிறுவனத்தை செயற்படுத்தக் கூடியவரும் தில்லைநாதன் மியூசிக்கல் அக்கடமிக்கு ஆசிரியர்களும், (B. V. Data) உடன் விண்ணப்பிக்கவும். (தங்குமிட வசதியுண்டு). Ravindra Institute and Multi Services C/o T. R Enterprice, Kalaimani Lane Kaddaipperai, Jaffna.
(C 2006)

**எம்பயர் திரையில்**
ராஜேந்தர்—சங்கீதா
**மைதிலி என்னைக் காதலி**

**லிடோ Jaffna**
10-30, 2-30, 4-30 6-30
BODY AND SOUL
(Colour)

2வது மாதம்
**வெலிங்டன்**
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன்
அம்பிகா, கவுண்டமணி
நடித்த
**நான் பாடும் பாடல்**
(கலர்)


## நன்றி நவிலலும் சபண்டீகரண அழைப்பும்



அமரர்
திருமதி
**கனகம்மாமுத்தையா**

தோற்றம்: 21-05-1898
மறைவு: 28-03-1986

ஊரெழு மேற்கு திருமதி கனகம்மா முத்தையா அவர்களின் பிரிவின் போது மரணச்சடங்குகளில் கலந்து கொண்டு உதவிய உற்றார், உறவினர் நண்பர்களுக்கு எமது உளம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன் 27-04-1986 ஞாயிறன்று ஊரெழுவில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சிகளிலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஊரெழு மேற்கு,
சுன்னாகம். C 1994

## பலாலி முகாமில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நகைகளுக்குப் பணம் செலுத்தியோருக்கு வழங்கப்படும்.

காலை 8மணியிலிருந்து நண்பகல் 12மணிவரை பலாலி இராணுவ முகாமில் வைத்து இந்நகைகள் வழங்கப்படும், நாளொன்றுக்கு 200பேர் வீதமாகத் தொடர்ந்து நான்கு தினங்களுக்கு நகை விநியோகம் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து பிரதான வீதி மற்றும் அனைத்துக் கிளைகளிலும் வாராவாரம் விநியோகிக்கப்படும். தற்போது மேற்கொள்ளப்படவுள்ள விநியோகம் சம்பந்தமாக அறிவுறுத்தல்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பனபற்றிய விளக்கங்களை சம்பந்தப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு நேரடியாக தெரிவிக்க வேண்டியிருப்பதால் ஸ்ரான்லி வீதிக் கிளையில் பணம் செலுத்தி சகல வாடிக்கையாளர்களுக்கும் எதிர் வரும் 28ம் திகதி காலை 9-00 மணிக்கு வங்கி முன்பாக கூடுமாறு சங்கம் கேட்டுள்ளது. மேலும் போக்குவரத்து ஏற்பாடு சம்பந்தமாகவும் அறிவுறுத்தல் வழங்கப்படும்.

மேலும் இவ்வாடிக்கையாளர்கள் மேற்குறிப்பிட்ட திகதிகளில் காலை 8-00 மணிக்கும் பகல் 12-00 மணிக்கும் இடையில் பலாலி இராணுவமுகாமில் நகைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அந்தந்து வாடிக்கையாளருக்கும் வங்கி தனிப்பட்ட விபரம்கொண்ட கடிதம் ஒன்று அனுப்பவுள்ளது.

சங்கம் மேற்கொண்டு தனது நடவடிக்கைகளை தீர்மானிக்கும்வகையில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நிர்வாகக்குழு யாழ். பல்கலைக் கழகத்தில் கூடவுள்ளது. எனவே சகல நிர்வாகக் குழு அங்கத்தவர்களும் மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக் கழகத்தில் சமூகமளிக்குமாறு சங்கம் கேட்டுக்கொள்கின்றது. (மா)

## அநுராதபுரம்..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சட்டத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்.

திரு. சந்திரா பண்டாரா தொடர்ந்து பேசுகையில்; ''இந்த விபத்து நடந்தபோது அந்தக்குதத்தில் சுமார் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான எரிபொருள்கள் இருந்தன. அதிர்ஷ்டவசமாக அவைநிலத்தினடியில் இருந்தமையினால் அவை தீப்பிடிக்கவில்லை. அதில் தீப்பிடித்திருந்தால் அநுராதபுரம் நகரமே அழிந்திருக்கும். பெற்றோலிய கூட்டுத்தாபன ஊழியர்கள் இருவர் தமது உயிரையும் மதிக்காது துரிதகதியில் செயல்பட்டமையினாலேயே அதனைப் பாதுகாக்க முடிந்தது'' என்றார். [ய பி]

## மந்திரி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இலங்கை அரசு விரும்புவதாகத் தெரியவருகிறது.

அமைச்சர் திரு. பி. சிதம்பரமும், திரு ரொமேஷ் பண்டாரியும் இலங்கை செல்வதையடுத்து இந்தியாவுக்கான இலங்கைத்தூதுவர் திரு. பேர்னாட் திலகரத்தினவை இலங்கைக்கு வரும்படி ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அழைத்துள்ளார்.

இதேவேளை புதுடில்லியில் நேற்று நடைபெற்ற பொது வைபவமொன்றில் பேசிய திரு. ரொமேஷ் பண்டாரி, இலங்கையில் நிலவும் இனப் பிரச்னை மிகவும் சிக்கலானது என்றும், அங்கு நாம் மேற்கொள்ளும் பயணத்தினால் அதிக விளைவினை எதிர்பார்க்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கை வாழ் தமிழர்களின் குறைபாடுகளை நீக்கவும் அவர்களது அபிலாசைகளை நிறைவேற்றவும் வகை செய்யும் விதத்தில் அரசியல் தீர்வொன்று கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்றும் திரு ரொமேஷ் பண்டாரி கூறியுள்ளார்.

## சந்நிதி ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு வேண்டிய நிவாரணம் பெறுவதற்கான முயற்சிகளைத் தாம் மேற்கொண்டுள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார். (மா)

## பெண்ணுக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யைச் சேர்ந்த சுமார் 45 வயதுள்ள செ. மனோன்மணி என்பவருக்கு இத்தண்டனை வழங்கப்பட்டது.

இவரின் சடலம் 3ம் கட்டைச்சந்தியில் உள்ள தந்திக் கம்பம் ஒன்றில் நேற்றுக் கட்டப்பட்டிருந்தது. (மா)

## அநுராதபுரத்தில் இறந்தவர்களும் கைதானவர்களும்

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் எரிபொருள் நிலையக் குண்டு வெடிப்பில் மரணமானவர்களுள் எரிபொருள் விநியோகிக்கும் இரு தனியார் ஸ்தாபனங்களின் பவுஸரில் கடமையாற்றியவர்களான ஐந்துபேரின் விபரங்கள் தெரியவந்துள்ளன. அவை வருமாறு;

பருத்தித்துறை பரிமளா போக்குவரத்துச் சேவையைச்சேர்ந்த ஆர். ராமதாஸ், பாலகிருஷ்ணன், பதுளையைச் சேர்ந்த யூஸுப் அல்லது காதர் மற்றும் 'சிங்காரவடிவு' ஸ்தாபனத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி அல்லது தங்கராசா [நீர்வேலி] மேலும் 15பேர் அநுராதபுரப் பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்காகத் தடுத்துவைக்கப் பட்டுள்ளனர். அவர்கள் விபரம் வருமாறு:

எஸ். நடராசா, வி. நடராசா, ஜே. செபஸ்தியாம்பிள்ளை, கே. தர்மலிங்கம், எம். விக்னேஸ்வரன், பி. நடராசா, ஜி. நேசன் கே. சண்முகராசா, ராமன் துரைராசா, [illegible] ரத்தினம். கே. கதிரமலை, கே. வேலு, எம். அருளானந்தம், பி. எம். ஜி. தங்கராசா, எம். நகுலேந்திரன்

இவர்களை விடுதலை செய்யுமாறு யாழ. அரசாங்க அதிபர், அநுராதபுரம் அரசாங்க அதிபருடன் தொடர்புகொண்டுள்ளார். (மா)

## ரூபவாஹினி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்று இவர்கள் அரச அதிபரிடம் கவலை தெரிவித்தனர்.

''இறந்த குருக்களை உயிருடன் இருப்பதாகக் கூறியமை அப்பட்டமான பொய்யாகும். இறந்தது பூசகர் சின்னையாக் குருக்களும் அவரது உதவியாளருமாவார். ஆனால் ரூபவாஹினியில் காட்டப்பட்டவரோ பூசகர் பாலேந்திரா ஐயர். அத்துடன் சந்நிதி ஆலயத்தில் போராளிகள் கொங்கிறீற் மதில்கள் பாதுகாப்பாக அமைத்துத் தொண்டமனாறு இராணுவ முகாமைத் தாக்குவதாகவும் கூறப்பட்டமை வருந்தத்துக்குரிய விஷயமாகும்.

சந்நிதிகோவில்முற்றாகச் சேதமாக்கப்பட்டது, தேர் எரிந்து சாம்பரானது பெரியகாண்டாமணி துண்டுதுண்டாகச் சிதறிக்கிடந்தமை, மடங்கள், கடைகள் எரிக்கப்பட்டிருப்பது எதையும் ரூபவாகினியில் காட்டாது, அரசாங்கதரப்புக்குச் சாதகமாகக்காட்சிகளைக் காட்டித் தமிழ்மக்களை ஏமாற்ற நினைப்பது, [illegible] மதத்தை இழிவு படுத்தும் [illegible] செய்கையாகும்.

அத்துடன் செல்வச்சந்நிதி கோவிலுக்கு அரசாங்க அதிபர் மட்டும்தான் சென்று பார்வையிடவேண்டுமாகவும், பிரிகேடியர் தொண்டமானாறு முகாமில் வந்து நிற்பதாகவும் கூறப்பட்டது பிரஜைகள் குழுமூலம் [illegible] செய்யப்பட்டது. அந்த [illegible] படிக்கையை மீறி [illegible] மேற்பட்ட இராணுவத்தினர் ஆயுதபாணிகளாகப் [illegible] சூழ பிரிகேடியர் வந்து செல்வச்சந்நிதி ஆலயத்தை பார்வையிட்டு உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிட்டு மக்கள் மனதைத் திசை திருப்ப முனைந்துள்ளனர்'' இவ்வாறு குழுவினர் தமது ஆட்சேபத்தை அரச அதிபரிடம் தெரிவித்துள்ளனர்.

# வறுமை நிவாரண முத்திரை தகுதிபெற்றோர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

வருமானம் குறைந்த மக்களுக்கு வறுமைநிவாரணச் சட்டத்தின் கீழ் உணவுமுத்திரை வழங்குவதற்கான பூர்வாங்க வேலைகள் மீண்டும்தற்போது ஆரம்பமாகியுள்ளன. இவ்வேலைகள் 1985ம் ஆண்டு ஒக்டோபர் / நவம்பர் மாதங்களிலும் 1986ம் ஆண்டு மார்ச் மாதத்திலும் ஆரம்பிக்கப் பட்டு இடைநிறுத்தப்பட்டிருந்தமை தெரிந்ததே. அப்போது பல குடியிருப்பாளர்கள் வறுமை நிவாரணக்குழுக் கூட்டத்தில் படிவம் 'பி'யைப் பெற்றிருக்கலாம். அவ்விரு சந்தர்ப்பங்களிலும் படிவம் 'பி'யைப் பெறமுடியாது போனவர்கள் அவ்வப்பகுதியில் தற்போது கூடும் வறுமை நிவாரணக் குழுக் கூட்டத்திற்குச்சென்று படிவம் 'பி'யைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் படிவம் 'பி'யைப்பெற்ற ஏழு நாட்களுக்குள் அப்படிவம் நிரப்பப்பட்டு கிராமசேவையாளரிடம் கையளிக்கப்படல் வேண்டும். படிவம் 'பி'யை இதுவரை பெறாதவர்கள் 30-04-86க்கு முன்னர் அதைப் பெற்றுக்கொள்ளவேண்டும். இத்திகதிக்குப் பின்னர் படிவம் 'பி' வழங்கப்படமாட்டாது.

படிவம் 'பி'யைப் பெற்றவர்கள், அப்படிவத்தினை 07-05-86 க்கு முன்னர் அதை நிரப்பி கிராமசேவையாளரிடம் கொடுத்து கிராமசேவையாளர் அதைப்பெற்றுக்கொண்டதற்கான பற்றுச்சீட்டைப் பெறவேண்டும். 08-05-86க்கு பின்னர் கையளிக்கப்படும். எந்த 'பி' படிவமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

நிரந்தரமாக வாழும் பகுதியைவிட்டுத் தற்காலிகமான இடங்களுக்குக் குடிபெயர்ந்தவர்களும், வேறுகாரணங்களுக்காக படிவம் 'பி'யைப் பெற முடியாதிருப்பவர்களும் ஏற்கனவே படிவம் 'பி'யைப் பெற்றிருந்தும் அதைச் சமர்ப்பிக்க முடியாதிருப்பவர்களும், தாம் நிரந்தரமாக வாழ்ந்த பகுதிக் கிராமசேவையாளரிடமோ அன்றி அவ்வப்பகுதி உதவி அரசாங்க அதிபரிடமோ 30-04-86க்கு முன்னர் சென்று அவர்களின் ஆலோசனையைப் பெறுமாறு சமூகசேவைப்பகுதி உதவிப்பணிப்பாளர் திருமதி சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார்.

## அமிருக்கும் ஐயம்

அமைச்சர் சிதம்பரத்தினதும் திரு பண்டாரியினதும் இலங்கை விஜயம் பயன்தருமென்பதில் தமக்கு நம்பிக்கை இல்லை என்று திரு. அமிர்தலிங்கம் டில்லியில் ராய்ட்டருக்கு அளித்தபேட்டியில் தெரிவித்துள்ளார். (து)

# "எரியும் நெருப்பில் தள்ளப்பட்டோம்"

## முன்னுள் மேயர் தம்பிராஜாவின் மனைவி வாக்குமூலம்

[கொழும்பு]

''வெடிச்சத்தம் கேட்டு வீட்டின் விருந்தைக்கு நானும் என் கணவரும் வந்து பார்த்த போது வீட்டு முன் கதவை உடைத்துக்கொண்டு வந்த ஒருவன் அங்கு மூண்டிருந்த தீயில் என்னையும் என்கணவரையும் பிடித்துத்தள்ளினன்''

இவ்வாறு மாத்தளையில் கைக்குண்டு வீச்சுக்குப் பலியாகிய முன்னுள் நகர சபைத் தலைவர் திரு தம்பிராஜாவின் மனைவி திருமதி கமலா தம்பிராஜா அளித்த வாக்குமூலமொன்றில் கூறியுள்ளார்.

பலத்த எரிகாயங்களுடன் மாத்தளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட திருமதி தம்பிராஜா நேற்று முன்தினம் காலமானுர்.

அவர் மரணமாகுமுன் அளித்த இவ்வாக்கு மூலத்தில் தொடர்ந்து ''வெடிச்சத்தம் கேட்டு அறையிலிருந்தநானும் என் கணவரும் வீட்டுமுன் புறம்வந்து பார்த்தபோது. சந்தேகநபர்கள் இருவரும் வேறுபலரும் வீட்டுக்கு முன்ஞல் நிற்பதைக் கண்டேன். அப்போது என் வீட்டின் முன்புறம் எரிந்துகொண்டிருந்தது. பின்னர் ஒருவர் வந்துஎங்களை எரியும் தீயினுள் தள்ளிஞன். அதன்பின் என்ன நடந்ததென்று எனக்குத் தெரியாது பின்னர்தான் எனது கணவர் இறந்ததையும், வீடும் பல வாகனங்களும் தீக்கிரையானதையும் அறிந்து கொண்டேன்''என்று கூறியுள்ளார்.

மரணவிசாரணை நடத்திய மாத்தளை மாவட்ட நீதிபதி திரு. சிறில் பிகுணகும்பர, தலைமறைவாகியுள்ள சந்தேக நபர்களைக் கைது செய்யுமாறு பொலிஸாரைப் பணித்து விட்டு திரு. தம்பிராஜாவின் மரணம்கொலைஎனத் தீர்ப்பளித்தார். [ய-மா]

## சோதனையில் பொலிஸாருடன் ராணுவம்

[கிளிநொச்சி]

ஆனையிறவு இராணுவமுகாமின் முன்பாகத் தடைமுகாம் சோதனையின் போது பொலிஸாருக்கு உதவியாக இராணுவமும் கடமையில் ஈடுபட்டுள்ளது. பொலிஸார் சோதனை மேற்கொள்ளும் போது இராணுவத்தினர் நவீனரக ஆயுதங்களுடன் காவல் புரிகின்றனர். இதேவேளை லொறிகள் மீதான சோதனைகள் மிகவும் நுணுக்கமான முறையில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவருகிறது.சகல பொருள்களும் கீழே இறக்கப்பட்டே அச்சோதனை நடைபெறுகிறது குறிப்பிடத்தக்கது.

## எந்த நிலைமையிலும் சேவைபுரிய யுவதிகள் பயிற்சி பெற்றிருக்கவேண்டும்

[பண்டத்தரிப்பு]

''ஊர்காவற்றுறை கடல்பகுதியிலிருந்து அடிக்கடி பீரங்கிச் சூட்டுச் சம்பவங்களும் மோட்டர் ஷெல் தாக்குதல்களும் நடைபெறுவதால் அப்பகுதியில் வசிக்கும்கர்ப்பிணித் தாய்மார்கள் பலருக்கு அதிர்ச்சி காரணமாக கர்ப்பச் சிதைவுகள் ஏற்படுவதாக அறிகின்ருேம் இவர்களை உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வசதியில்லாததனுல் உயிராபத்தும் ஏற்படுகின்றது. இந்த நிலையைத்தவிர்க்க இப்பகுதி யுவதிகளுக்குத் தகுந்த முதலுதவிப் பயிற்சிகளை வழங்கி கருச்சிதைவுகளுக்கு ஆளாகும் கர்ப்பிணித் தாய்மாருக்கு உதவி செய்ய சென். ஜோன் அம்புலன்ஸ் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.''இவ்வாறுசென். ஜோன் அம்புலன்ஸ் படையின் வேலணைப்பிரிவு அங்குரார்ப்பணப் பொதுக்கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் படையின் வடபிராந்திய ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்ஞசித்தம்பி குறிப்பிட்டார்.

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்தியமகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்த வைபவத்திற்கு வித்தியாலய அதிபர் திரு. மு. சிவராஜரத்தினம் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பிரதேச அத்தியட்சகர் திரு நா.போஜன் உரையாற்றுகையில் ''போக்குவரத்து வசதிகள் மிகவும் குறைவாயிருக்கும் தீவுப்பகுதிகளில் பொதுமக்களுக்கு உடனடிச் சிகிச்சைகளை வழங்கி உயிரைக் காப்பாற்றும் பெரும் பொறுப்பு படையின் முதலுதவியாளர்களிடமே உள்ளது என்றும், மாணவர்கள் முதலுதவிப் பயிற்சிகளைப் பெற்று தமது சமுதாயத்திற்குப் பயன்தரும் சேவையை ஆற்றவேண்டும்'' என்றும் குறிப்பிட்டார்.

விழா மலரை திரு.வி. சுதாகர் வெளியிட்டு வைத்தார் திரு சிவன் இளங்கோ,செல்வி கே. இராஜேஸ்வரி ஆகியோர் உட்பட மற்றும் சிலர் உரையாற்றினர்கள். இறுதியில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. பிரிவு அத்தியட்சகர் திரு. அ கணேசலிங்கம் நன்றியுரை நிகழ்த்திஞர்.

## புளொட் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் கூர்மையடைந்து வரும் இவ்வேளையில் எமது போராட்டம் அனைத்து சமூக ஒடுக்கு முறைகளுக்கும் மேலாதிக்கங்களுக்கும் எதிரானது என்டதில் எச்சரிக்கையோடும் விழிப்போடும் எமது மக்கள் செயல்பட வேண்டியது மிக அவசியமாகும்,' என்று ''இவ்வேளையிலும் இப்படியான நிகழ்வா?'' என்ற தலைப்பிலான துண்டு பிரசுரமொன்றில் தமிழீழ விடுதலைக் கழகம் குறிப்பிட்டுள்ளது

அந்த பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

''இவ்வகையில் கடந்த செவ்வாய்க்கிழமை (22-04 86) அச்சுவேலியில் செல்வநாயகபுரம் என்ற கிராமத்தில் உள்ள திரு கொலின் என்பவரது தோட்டத்தில் திருமதி தனபால் சிவமணி என்பவரது ஆடு மேய்ந்துள்ளது இதனுல் இந்த ஆட்டை திருமதி கொலின் பிடித்து வைத்திருந்தார் இது தொடர்பாக இவருடன் கதைக்கச் சென்ற திருமதி தனபால் சிவமணியை திரு கொலின் சாதியை இழுத்துப் பேசியும், கடுமையான வார்த்தைப்பிரயோகமும் செய்துள்ளார் இதனுல் ஏற்பட்ட தர்க்கத்தின்போது திரு. கொலின், திருமதி தனபாலுக்குக் கல்லால் அடித்து காயப்படுத்தியுள்ளார் இச்சம்பவம் தொடர்பாக திரு. கொலின் விசாரிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது விசாரணையின் திரு. கொலின் தண்டிக்கப்பட்டு கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்

''எனவே இது தொடர்பாக உண்மை நிலையை உணர்ந்து மக்கள் தொடர்ந்தும் சாதிப்பாகுபாட்டை கூர்மைப்படுத்தாமல் வீதித்தடைகளை அகற்றுமாறு வேண்டுகிருேம்.

## மண்டூர் தேடுதல்வேட்டையில் 1000க்கு மேலான படையினர்

[மட்டக்களப்பு]

மண்டூர்ப் பகுதியைச் சுற்றி வளைத்து மாபெரும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த ஆயுதப் படையினர் 56 பேரை கைது செய்துள்ளனர் இரு தினங்களுக்கு முன் அதிகாலை ஒருமணிதொடக்கம் நேற்றுப் பிற்பகல் 5 மணிவரை இத் தேடுதல்வேட்டை நடைபெற்றது.

இத்தேடுதல் வேட்டையின் போது வீதியில் எதிர்ப்பட்ட இரண்டுபேர் சைனைட்அருந்தி உயிரை மாய்த்தனர். இவர்களின் சடலங்கள் படையினரால் ஹெலிகொப்டர் மூலம் முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டன

இறந்தவர்களில் ஒருவர் பட்டிருப்பைச் சேர்ந்த பாபு என்றழைக்கப்படுபவர் என்றும், மற்றவர் பாண்டிருப்பைச் சேர்ந்தவரென்றும் தெரிய வந்துள்ளது. வீடுகளில் இருந்த அத்தனை ஆடவர்களும் முகமூடிகள் முன்னிலையில் நிறுத்தப்பட்டனர்.

மண்டூர்த் துறையில் தரித்து நின்ற புத்தம் புதிய படகு ஒன்று கைப்பற்றப்பட்டது இப்படகு பிரயாணிகளின் சேவைக்கு மண்டூர் 3ம் குறிச்சிக் கிராம அபிவிருத்திச் சபையால் வாங்கப்பட்டது.

வயல்வெளியில் வைத்து கூடாரமொன்றுக்குள்ளிருந்து, கலர் டெலிவிஷன், மோட்டார் சைக்கிள் ஆகியன ஆயுதப்படையினரால் கைப்பற்றப்பட்டன.

இத்தேடுதலில் ஆயிரத்துக்கு மேற்பட்ட படையினர் ஈடுபட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட 5 பேரில் பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் அடங்குவர். [மா]

## 'துப்பாக்கி தொழிற்சாலை' முற்றுகை

[கொழும்பு]

சட்டவிரோதமாக இயங்கி வந்த துப்பாக்கித் தொழிற்சாலையொன்று இரகசியத் தகவலையடுத்து பொலிஸாரினுல் முற்றுகையிடப்பட்டது.

வத்தறப்ப என்னும் இடத்தில் இயங்கி வந்த மேற்படி துப்பாக்கித் தொழிற்சாலையிலிருந்து 26 கட்டித் துப்பாக்கிகளும், 12 துப்பாக்கிகளும் பொலிஸாரினுல கைப்பற்றப்பட்டுள்ளன.

இத் தொழில்ற்சாலையுடன் சம்பந்தப்பட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் முன்னுள் ஆசிரியர் ஒருவர்கைதாகியுள்ளார். [ய-பி]

## இன்றைய பலன்

மாதம்- சித்திரை
திகதி- 13 (26 - 4 - 1986)
கிழமை- சனி
திதி- துதியை
பி. ப. வரை
நக்ஷத்திரம்- விசாகம்
காலை. 9 - 17ன் மேல்
அனுசம்

மேடம்; ஆயுத பீடைக்கு இடமுண்டு. எதிலும் அவதானம் வேண்டும். வெளியிடத்துப் பயணம் வேதனையைத் தரலாம்.

இடபம்: களஸ்திர வழியால் மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம்பெறும். காதலர் வாழ்வில் கனகுஷியான தினம். வாழ்க்கை உற்சாகம் நிரம்பியதாக இருக்கும்.

மிதுனம்: கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள். மற்றவர்களின் ஏளனப்பார் வைக்குஇலக்காகலாம். பணத்துடன் பழகுபவர்கள் எச்சரிக்கை வேண்டும்.

கடகம்: கை கொடுத்துதவுவதற்கு நண்பர்கள் முன் வருவர். காரிய சித்தியும் கிட்டும். நீண்டநாள் எதிரிகள் மீண்டும் நண்பர்களாவார்கள்.

சிங்கம்: முயற்சியால் உயர்ச்சியுண்டு. விவசாயிகள் வாழ்க்கையில் முன்னேற்றமுண்டு. மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும.

கன்னி: மக்கள் மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். உள்ளத்தில் உவகை துள்ளும். சகோதர பாசமும் தலைதூக்கும்.

துலாம்: குறுக்கு வழியில் இறங்குவதால் சட்டத்தின் பிடியில் மாட்டிக்கொள்ள நேரிடும் திரைமறைவில் உங்கள் நடவடிக்கை கண்காணிக்கப்படும்.

விருச்சிகம்: கவலையின் தாக்குதலால் வேதனைப்படுவீர்கள் சீறிவரும் கோபத்தை அடக்கமுடியாமல் திண்டாடுவீர்கள். பொறுமை வேண்டும்.

தனுசு: இன்னலின் பின்னல் சோர்வைத் தரலாம். கற்றதனுல் பயன் இன்று கிடைக்கும். கலை உலகம் சம்பந்தப்பட்டவர்களுக்குப் புகழ் குவியும்.

மகரம்: மனையில் பூசல்கள் தோன்றி மறையும். தனி வழிப் பயணத்தைத் தவிர்க்கவும். நண்பர்கள் சூழ்ச்சி வலை விரிப்பர்.

கும்பம்: அறிவுப் பசிக்கு இன்று தாராளமாக விருந்து கிடைக்கும். ஆராச்சிகளில் ஆர்வம் பிறக்கும். குடும்பத்துலும அமைதியான சூழ்நிலை மதன்படும்.

மீனம்: வசதிகள் பெருகும். வாழ்க்கையும் வளமாகும். புத்திரர் வழியால் புகழும் கிடைக்கும். புதிய பாதையில் நடைபோடுவீர்கள்.

திருமலை
வே. ரவீந்திரன்

## முகவரிடம் ஏமாந்தோர்: பாகிஸ்தானில் அவதி

(கொழும்பு]

வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி உள்ளூர் முகவரினுல் தெரிவு செய்யப்பட்டுப் பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட்ட சிலர் தற்போது அங்கு நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

இது தொடர்பாக வெளிநாட்டு அமைச்சுக்குக் கிடைத்த தந்திச் செய்தியின் படி, 23 இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களினுல் கடந்த பெப்ரவரி மாதம் 10 ம் திகதி கராச்சிக்கு அனுப்பப்பட்டனர் என்றும் அங்கிருந்து ஈரான் சென்ற இவர்கள், உரிய விசா வைத்திருக்காதமையினுல் ஈரான் பொலிசாரால் கைது செய்யப்பட்டுப் பின்னர் பாகிஸ்தானுக்கு நாடு கடத்தப்பட்டனர் என்றும் தெரியவருகிறது.

பாகிஸ்தானில் நிர்க்கதியான நிலையில் இருக்கும் இவர்கள், தற்போது இலங்கை திரும்பும்முகமாக தமது உறவினர்களுக்கு அறிவித்து விமானச் சீட்டைப் பெற்றுத்தருமாறு, வெளிநாட்டு அமைச்சுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (பி)

## வவனியா அபிவிருத்தி வேலைகள் நிறுத்தம்

[வவனியா]

உலக வங்கியின் நிதி உதவியுடன் வவனியாவில் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி திட்ட வேலைகளை உடன் நிறுத்தும்படி திட்ட அமுலாக்கல் அமைச்சு அறிவித்துள்ளதாக வவனியா கச்சேரி வட்டாரங்கள் கூறின.

இதே போல் மன்ஞர் மாவட்ட ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தி வேலைகளும் நிறுத்தப்பட்டுள்ளனவாம்.


தேசிக்காய் வாசனையுடன்




எம்டீ சோப்

115 கிறும் ரூபா 2/- மட்டுமே.

இதே விலையில் இதைவிட சிக்கனமானதும் சிறந்ததுமான வேறெரு சவர்க்காரம் வாங்க முடியுமா?

இன்றே வாங்குங்கள்.

புதிய எம்டீ சோப்

எம்டீ என்ரபிறைஸ், அச்சுவேலி.

(A408)

## இன்று தந்தை செல்வா நினைவுச் சொற்பொழிவு நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தந்தைசெல்வநாயகம் அவர்களுடைய ஒன்பதாவது சிரார்த்த தினத்தையொட்டி இன்று 26 ம் திகதி சனிக்கிழமை மாலை சுண்டுக்குளி யாழ் வை. எம். சி. ஏ மண்டபத்தில், 78 ம் ஆண்டு முதல் 82 ம் ஆண்டு வரை நிகழ்த்தப்பட்டுள்ள தந்தை செல்வா நினைவுச் சொற் பொழிவுகள் ஏழையும் உள்ளடக்கியுள்ள தொகுதி நூலில் வெளியிடப்படும்.

தந்தை செல்வா அறங்காவலர் குழுவினரால் நடத்தப்படும் இவ் வெளியீட்டு விழாவில் 'தந்தை செல்வா நினைவுச் சொற்பொழிவு' களின் முதல் தொகுதியை யாழ் மாநகர ஆணையாளர் திரு சி. வி. கே சிவஞானம் பெற்றுக் கொள்வார். பின்னர் யாழ் நகரின் பாடசாலை அதிபர்கள் இதன் பிரதிகளைப் பெற்றுக் கொள்வர்.


### பணிவான வேண்டுகோள்

ஆலய தொண்டுகள் செய்வதற்கு எம்மால் அமர்த்தப்பட்ட C 90 86 ஸ்ரீ 5956 மோட்டார் சைக்கிளை 23-4-86 புதன்கிழமை 12-30 மணிக்கு கோவில் அருகாமையில் உள்ள கடையில்வைத்தபொழுது இரண்டு இனந்தெரியாத நபர்கள் உடன்தருவதாகக் கூறி எடுத்துச்சென்றார்கள். இன்றுவரையும் தரவில்லை. தயவுசெய்து புனித இயக்கங்கள் இதில் தலையிட்டு அதை மீட்டுத்தருமாறு பணிவாக வேண்டுகிறேன்.

பொ. சுப்பிரமணியம்,
பழனி ஆண்டவர் தேவஸ்தானம்,
இருபாலை றோட்,
கோண்டாவில்.

[C-1992]

### யுவதிகளுக்கு மின்தறியில் ஊதியத்துடன்
### பயிற்சி வகுப்பு

மின்தறியிலும் கைத்தறியிலும் பயிற்சி பெற்றவர்களும் பயிற்சி பெற விரும்புவோரும் **30-4-86** காலை 9 மணிக்கு நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

★ இடம்பெயர்ந்து அகதிகளாக இங்கு வந்துள்ள பிள்ளைகளுக்கும் எமது தொழிற்சாலையை அண்டிய கிராமங்களில் வசிக்கும் பிள்ளைகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

### சீமா சில்க் இன்டஸ்றீஸ் லிமிட்டெட்,

பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி; 23170 (A620)

### விக்னு டியூசன் சென்றர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[யாழ் நகரில் O/L வகுப்புகளுக்கு தனித்துவம் பெற்ற ஒரேயொரு நிறுவனம்]

புதிய **O/L** பிரிவு 6
ஆரம்பம்: 30-4-1986

DAY CLASS [8-30 — 1-30]
EVENING CLASS 2-30 — 4-30

5-ம், 6-ம், 7-ம், 8-ம், 9-ம் வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.

மு. குறிப்பு-

★ 9 வருடகாலமாக O/L வகுப்புக்கள் யாழ் நகரில் இவ் நிறுவனத்தில் மட்டும் சிறப்பாக நடைபெறுகின்றது.

★ கண்ணியத்துடனும் கட்டுப்பாட்டுடனும் நடத்தும் ஒரே நிறுவனம்.

★ விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.

★ ஒவ்வொரு வகுப்பிலும் [50 மாணவர்களுக்குமேல் அனுமதிக்கப்படமாட்டாது.

[A 463]


# "பெண்கள் குழந்தைகளைப் பெற்றெடுக்கும்யந்திரமல்ல"

[புலோலி]

"பெண்கள் சமுதாய எழுச்சிக்கும், மேம்பாட்டிற்கும் அரும்பெரும் தொண்டாற்றி வருகின்றார்கள். இன்றைய சமயத்தில் பெண்களின் பங்களிப்பு மிகமுக்கியமானதாகும். தமிழை வளர்ப்பதிலும், சமுதாயத் தொண்டு புரிவதிலும் பெண்கள் முன்னின்று பணியாற்றியுள்ளனர் இதனால் தமிழ்த் திறன்குன்றாத கன்னித் தமிழாகத் திகழ்ந்து வருகின்றது".

பருத்தித்துறை புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்றத்தின் 24வது ஆண்டு விழாவிலே கலந்து கொண்டு உரையாற்றிய செந்தமிழ் திலகம் செல்வி புஷ்பா செல்வநாயகம் இவ்வாறு குறிப்பிட்டார். மன்றத்தலைவர் திரு. கோ. குமாரவேல் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிலே திரு. ஏ. சோமசுந்தரம்பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து உரையாற்றிய செந்தமிழ்திலகம் புஷ்பா செல்வநாயகம் குறிப்பிட்டதாவது:

"பெண்கள் குழந்தைகளைப் பெறும் இயந்திரம் என்று கருதக் கூடாது. பெண்கள் தமது உயிரைப் பணயம்வைத்துப் பிள்ளைகளைப் பெற்றெடுக்கின்றார்கள். குழந்தைகளுக்கு தாய்ப் பாலோடு மொழி உணர்வு, வீரம் என்பனவற்றை ஊட்டி வளர்த்தும் சமுதாய எழுச்சிக்கும் மேம்பாட்டிற்கும் வழி வகுக்கின்றார்கள்' தனதுபிள்ளை சிறப்பக வளர்ந்து சமுதாயத்தில் சிறந்த பிரஜையாகத் திகழவேண்டும் என்பதே ஒவ்வொருதாயினதும் எதிர்பார்ப்பாகும்,என்று கூறினார்.

திரு. கோ. குமாரவேல் தனது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது தமிழ் மக்கள் இன்று பல்வேறு பிரச்னைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. தமிழ், கலை, கலாசார பாரம்பரியங்கள் பேணிப் பாதுகாத்து வளர்க்கப்பட வேண்டும். இந்த இலட்சியத்துடனேயே ஞானசம்பந்தக் கலைமன்றம் இயங்கிவருகிறது என்றார்.

கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. கலை நிகழ்ச்சிப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை செல்வி புஷ்பா செல்வநாயகம் வழங்கினார். மன்ற ஆசிரியை திருமதி கே சூரியகுமாரியின் சேவைகளும் பாராட்டப்பட்டு பரிசுகளும் வழங்கப்பட்டன.

## பண்பார்ந்த பண்டிதர்

வல்வெட்டித்துறையில் 'பண்டிதர் ஐயா' எனப் போற்றி அழைக்கப்படும், வல்வையின் இயற்றமிழ் போதகாசிரியரும், யாப்பிலக்கண வித்தகருமான பண்டிதர் சங்கர- வைத்தியலிங்கனார் அண்மையில் சிவபதமெய்தினார்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் அடி தொடர்ந்து வல்வைப் பதியில் இயற்றமிழிப் புலவர் என்னும் கீர்த்தியுடனும், பல அறிஞர்களால் புகழப் பட்டவருமான இயற்றமிழ்ப் புலவர், யாப்பிலக்கண வித்தகருமான பண்டிதர் வைத்திலிங்கனாரின் பேரனும், நீண்டகாலம் இலங்கை புகையிரத இலாகாவில் கடமையாற்றியவருமான யாப்பிலக்கண வித்தகர் இயற்றமிழ்ப் புலவர் பண்டிதர் சங்கர வைத்திலிங்கனார் அவர்கள் தமது 80 வது வயதில் இறைவனடி சேர்ந்தமை இயற்றமிழ் உலகிற்கு இன்னோர் பேரிழப்பு என்றால் மிகையாகாது.

"தோன்றிற் புகழொடு தோன்றுக" எனச் செந்நாப் போதன் குறளூடாகச் செப்பிய செம் மொழிக் கமையப் புகழ் பூத்த வல்வையிலே தமிழ் வளர்த்த பண்டிதப் பரம்பரையிலேயே பூத்தவர் இவர்.

வைத்தியலிங்கனார், வல்வை சிவன் கோவில் அக்கிரகாரத்தில் அச்சகம் நிறுவி "சைவபிமானி" என்ற பத்திரிகையை பல்லாண்டுகள் வெளியிட்டவர். அதே இடத்தில் இயற்றமிழ் சைவக் கல்லூரி ஒன்றை நிறுவிப் பரனருள் நீறும் தமிழ் மொழி வீறும் பரவ உழைத்தவர்.

பண்டிதர் சங்கர வைத்திலிங்கனார் "கம்பன் வீட்டின் கட்டுத் தறியாக,' அமைந்ததில் வியப்பில்லை பல னுவல் ஆக்கி எமக்களித்த பண்டிதர் ஐயா தாம் அரசாங்க சேவையில் இருந்த காலங்களிலும் தமது பேரனாரின் வழியைப் பின் தொடர்ந்து சைவக் கல்வியும், சைவ ஆசாரமும் வளரப் பல புராணங்களுக்கும், ஆலயங்கள் தோறும் சென்று, விரிவுரைகள் செய்தும், புராணப் படணங் ளுக்குப் பயன் சொல்லியும், சித்தாந்த நுண்பொருள்களையெல்லாம் சாதாரண மாணவர்களும் அறிந்து கொள்ளக் கூடிய வகையில் உப நியாயங்கள் செய்தும், திருவாசகம், திருமுறைகள் எல்லாம் பண்ணோடு ஓதியும், எவரும் விரும்பும் வண்ணம் இனிய பண்பான முறையில் யாவருடனும் பழகியும் எல்லோருடைய அன்பிற்கும் மரியாதைக்கும் உரியவராயிருந்தார்.

பண்டிதர் ஐயாவின் இறுதி ஆக்கம் "வல்வெட்டி வேவிற் பிள்ளையார் திரு ஊஞ்சல்," பாடலாகும்.

—மு. துரைரத்தினம்.

## மொழி, பிரதேச உணர்வுகளை மக்களுக்கு அளித்தவர்கள் எழுத்தாளர்களே!

(யாழ்ப்பாணம்)

"தமிழ்மொழி, பிரதேசம், கலாச்சாரம் என்ற உணர்வுகளை தமிழ் மக்களுக்கு உருவாக்கிக் கொடுத்தவர்கள் ஈழத்து எழுத்தாளர்களே. இவர்களுள்ளே முதன்மை பெற்று விளங்குபவர் டானியல் அவ கள்."

இவ்வாறு இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நல்லூர் இந்து விடுதியில் நடாத்திய டானியல் நினைவுக் கூட்டத்தில் பேசுப்போது ஐ. ஆர். அரியரத்தினம் குறிப்பிட்டார்.

நீர்வை பொன்னையன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற இந்த நினைவுக்கூட்டத்தில் திரு. அரியரத்தினம் பேசுகையில்; முற்போக்கு அரசியல் கட்சிகளும், எழுத்தாளர்களும் சமூகத்தில் ஒரேமாதிரியான செயற்பாடுகளைப் புரிபவர்கள். டானியல் போன்ற சிறந்த எழுத்தாளர்களை உருவாக்குவதில் பெரும் பங்கு வகித்தது கம்யூனிஸ்ட் கட்சியாகும். கம்யூனிஸ்ட்கட்சியின் முழுநேரத் தொண்டனாக விளங்கியவர் டானியல் என்றார்.

கவிஞர் முருகையன் தமது உரையில், வெளிநாட்டு வியாபார இலக்கியங்களை நம்நாட்டில் கட்டுப்படுத்தவேண்டும் என்பதில் டானியல் மிகவும் அக்கறையுள்ளவராக இருந்து வந்தார். நெல்லுக்குள் வளரும் புல்லுப்போல வியாபார இலக்கியங்கள் நல்ல இலக்கியங்களுக்கு தீங்குவிளைப்பன என்று கூறினார். டானியல் சாதி அடக்குமுறைகளைச் சாடினார். எங்கள் மத்தியில் இன்றும் 'நான்குவகை மக்கள் வாழுகிறோம்' என்ற உணர்வு சிறுவர்முதல் பெரியவர்வரை இருக்கவேசெய்கிறது. பாடசாலைச் சிறுவர்களிடையே இதனை இன்றும் காணமுடிகிறது மூடிமறைத்துஉள்ளேயுள்ளவற்றை நிதர்சனமானவற்றைமறைத்து பாசாங்குபண்ணும்போக்குஇன்றும்உள்ளது' டானியல் இந்த சாதி முறைப் பாட்டுப் போக்குகளை கண்டித்து எழுதினார் காவோலை கட்டி இழுத்துக்கொண்டு போனதையும், நயினார்களாக இருந்துகொண்டு நலிந்தவரை அடித்து நொருக்கித் துன்புறுத்திய கொடுமைகளையும் டானியல் எழுதினார்.

டானியலின் எழுத்துக்கள் சமூதாயத்தைப் படம்பிடித்த கோணங்கள் விஞ்ஞான நோக்குக்கொண்டவை. கைலாசபதியின் இலக்கிய ஆராய்ச்சியில் பழையனவற்றை அவர் ஆராய்ந்ததனைக் கண்டோம். அவர் ஏன் அவற்றைஆராய்ந்தார்? எங்கள் சமூகத்தை நன்றாக அறியவேண்டுமானால் முறைமையின்வேரைக் கண்டு பிடிக்கவேண்டும். டானியல் எழுத்தாளர் மட்டுமல்ல களத்திலும் நின்றவர் என்றார்.

மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா பேசுகையில்: இனக்கொலைகளுக்கு இன்று குரல் கொடுக்கிறோம், சமூகக் கொடுமைகளுக்கு குரல் கொடுப்பவர் யார்? சாதிக் கொடுமை இன்றில்லை என்பதெல்லாம் போர்த்தந்திரமே யாகும். மனிதன் ஒருவன் சிங்கத்தின் மார்பில் அமர்ந்து அதனைக் கொலைசெய்யும் சித்திரத்தைப் பார்த்த பேரறிஞர் பேனட் ஷா சித்திரம் வரைந்தவரைப் பார்த்து 'சித்திரம் நல்லது தான். ஆனால் இதனை மறுபக்கம் திருப்பிப் பார். அதாவது சிங்கம் மனிதனைக் கொல்லுவதாகப் பார்' என்றாராம். ஆம் டானியலும் அப்படித்தான் பார்த்தார். சமூகக் கொடுமைகள் இல்லை என்ற கதையை மறுபக்கமாகப் பார்த்தார்- எழுதினார் என்றார் எழுத்தாளர் பெனடிக்ற் பாலன் மற்றும் பலர் பேசினர்

## சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்

(யாழ்ப்பாணம்)

கிராமிய கலைக் குழுவினரின் "சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்" நாடகமும், "நாங்கள் இணைகிறோம்" கவிதா நிகழ்வும் இம் மாதம் 27 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் மேடையேற்றப் படவுள்ளன.

## சுழிபுரம் பகுதியில் பதற்றம்

[சுழிபுரம்]

சுழிபுரம் திருவடிநிலைக் கடலில் இருந்து மர்மமான தீப்பந்தங்கள் ஒன்றன்பின்ஒன்றாக இரவில் மக்கள்வாழும் பகுதிகளில் அடிக்கடி வீழ்வதால் மக்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

சுழிபுரம்காட்டுப்புலம், சுழிபுரம் மேற்குப்பகுதி, நடுச்சுழிபுரம் ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள் சுழிபுரம் டருளைப் பகுதியில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

சனிக்கிழமை 26-4-86

# இனப் பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியாவின் பங்கு முக்கியம்

— சரத்

[கொழும்பு]

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் பணியில் இங்கு மனித உரிமை மீறல் தொடர்பான சம்பவங்களை விசாரிக்குமாறும் அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகன் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு அண்மையில் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கலவானத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. சரத்முத்தட்டுவேகம பாராளுமன்றத்தில் நேற்று அவசர கால நீடிப்புச் சட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இத்தகவலைத் தெரிவித்தார்.

திரு. சரத்முத்தட்டுவேகம தொடர்ந்து பேசுகையில் "இனப்பிரச்சினை தொடர்பாக அரசின் நிலை என்ன; இந்திய அரசுடனு நட்புறவுத் தன்மை என்ன என்பன மதளிவாகப்புரியவில்லை. ஒரு சமயத்தில் அந்த நட்புறவு இந்திய அரசுடன் உறுதியாக உள்ளது. மறுகட்டத்தில் அது ஆட்டம் காண்கின்றது. இந்தப்பிரச்சனையைத் தீர்க்க இந்திய அரசின்பங்கு ஒரு முக்கிய அம்சமாகும் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்" என்றார்,

அண்மையில் ஜனாதிபதி அவுஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டத்தாபனத்துக்குஅளித்த பேட்டியில், இலங்கையின் சிறந்த நண்பன் பாகிஸ்தான் என்று கூறியுள்ளார்" என்ற சரத், இஸ்ரேலிய. எஸ். ஏ எஸ். மற்றும் தென்னாபிரிக்க ஏஜெண்டுகள் இங்கு என்ன செய்கிறார்கள்? என்று கேட்டதுடன் பிரிட்டனின் விமான ஓட்டிகள் ஐந்துபேருக்கு மட்டும் மாதம் தலா 3000 ஸ்ரேலிங் பவுண் இங்கு சம்பளமாக வழங்கப்படுகிறது" என்றும் கூறினார். [ய-பி]

## பருத்தித்துறை அகதிகள் கவனத்திற்கு

(பருத்தித்துறை)

கடந்த 23ந் திகதி அடையாள அட்டைக்கான படம் எடுக்கத்தவறிய பருத்தித்துறை அகதிகள்புனர்வாழ்வுச் சபையின் பராமரிப்பில் உள்ள சகல அகதிக்குடும்பத் தலைவர்களும் நாளை ஞாயிற்றுக்கிழமை தவறாமல் பருத்தித்துறை தம்பசெட்டி அகதிமுகாமுக்குச் சென்று தமது படத்தைத் தவறாது எடுக்கும்படி பருதித்துறைப் பிரஜைகள் குழுத் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார், காலை 8 மணி முதல் காலை 10 மணிவரை படம் எடுக்கப்படும் என்றும் இது அகதி முகாமில் இல்லாது தனியார் வீடுகளில் இருக்கும் பருத்தித்துறை அகதிகள் புனர்வாழ்வுச்சபையின் பராமரிப்பில் உள்ளவர்களுக்கும் பொருந்தும் என்றும் அவர் தெரிவிக்கிறார்.

## சந்நிதிப்பகுதியில் கண்டெடுத்த குண்டுகள்

(வல்வெட்டித்துறை)

கடந்த நான்கு தினங்களுக்கு முன்னர் செல்வச்சந்நிதி கோவில்பகுதியில் நடைபெற்ற சமரின்போது பொம்பர் விமானங்களிலிருந்து வீசப்பட்ட குண்டுகளில் வெடிக்காத, 5 அடி நீளமானஇரண்டுபெரிய குண்டுகள், இராணுவத்தினரின் ஹெல்மெட்டுகள், 60 தோட்டாககள் மோட்டார் ஷெல் பாகங்கள், வெற்று மகசீன் ஹோல்டர்கள் வேறும் சில ஆயுதங்களின் சிதறிய பாகங்களை இளைஞர்கள் கண்டு கைப்பற்றி தொண்டமானாறு, கெருடாவில் ஆகியபகுதிகளில் காட்சிக்காக் வைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் இவற்றைப் பார்வையிட்டுச் செல்கின்றனர்.

## கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

'நீரிழிவு நோய் சம்பந்தமான கருத்தரங்கு கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரியில் இன்று 26ந்திகதி சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் லயன்ஸ் பேராசிரியர் என். சரவணபவானந்தன். வைத்திய கலாநிதி திருமதி ரி சரவணபவானந்தன், வைத்திய கலாநிதி ஆர். நவரட்ணராசா, வைத்தியகலாநிதி எஸ். நாகநாதன், டாக்டர் சி இராஜேந்திரம், டாக்டர் ஏ. வி. இராஜரட்ணம் உட்படப் பலர் கருத்துரை வழங்குவார்கள்

நீரிழிவு நோயாளர்களையும் மறறும் பொதுமக்களனைவரையும் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு பயனடையுமாறு கோப்பாய் லயன்ஸ் கழகத்தினர் வேண்டுகின்றனர். [ஐ]

## வர்த்தகர் வீட்டில் கொள்ளை

[யாழ்ப்பாணம்]

இணுவில் துரைவீதியில் உள்ள வர்த்தகர் ஒருவர் வீட்டில் இரும்புப்பெட்டியுடன் பணம், நகைகள் என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. பலலட்சம்ரூபா பெறுமதியான இக்கொள்ளை நேற்று முன்தினமிரவு நடைபெற்றது. ஆயுதபாணிகளானவர்களே இக் கொள்ளையை நடாத்தியுள்ளனர். வீட்டில் உள்ள பலவிதமான பொருள்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. [ஐ]

## கூட்டணிக்குழு ராஜீவை சந்தித்துப் பேசியது

[புதுடில்லி]

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் மூன்றுபேர் கொண்ட குழுவொன்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை நேற்று முன்தினம் சந்தித்தது.

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அப்பாவித் தமிழ்மக்கள் இலங்கை ஆயுதப்படையினரால் சுட்டுக் கொல்லப்படுவது குறித்தும், இப்பகுதிகளில் யுத்தகால சூழ்நிலை நிலவுவது குறித்தும் இச் சந்திப்பின்போது திரு. ராஜீவ் காந்தியிடம் குழுவினர் விளக்கிக் கூறினார்கள்.

இந்திய வெளிவிவகாரக் கொள்கைத்திட்டமிடல் குழுவின் தலைவர் திரு ஜி பார்த்தசாரதி, வெளியுறவுச் செயலாளர் திரு ஏ. பி வெங்கடேஸ்வரன், திரு. ரொமேஷ் பண்டாரி ஆகியோருடன் இக்குழுவினர் கடந்த இரண்டு நாட்களாக மேற்கொண்ட பேச்சுவார்த்தை பற்றிய அறிக்கையொன்றும் திரு ராஜீவ் காந்தியிடம் வழங்கப்பட்டது. (து)

## இருபவுஸர் சாரதிகள் பொலிஸில்

(வவனியா)

அநுராதபுரம் எரிபொருள் நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச்சம்பவத்தில் சேதமடைந்த பவுஸர்களில் இரு பவுஸர்கள் வவனியாவிலுள்ள தனியாருக்கு சொந்தமானதாகும்.

இப்பவுஸர்களை ஓட்டிச் சென்ற சாரதிகளும் நடத்துநர்களும் எவ்வித காயமுமின்றி உயிர் தப்பியுள்ளனர் வின்சென்ட் நெல்சன். அருளானந்தம், குணசேகரா, சுனில் ஆகிய இவர்கள் தற்பொழுது அனுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்காகத்தத்து வைக்கப் பட்டுள்ளனர்.

## 'கூட்டணிக்கு தடை விதிக்காதது ஏன்?' அனுரா கேள்வி

[கொழும்பு]

"ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தீவிரவாதிகளுக்கு உதவியளித்தால் 24 மணி நேரத்திற்குள் அவர்களால் தனிநாடு அமைக்கமுடியும். ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தீவிரவாதிகளுக்கு ஆதரவளிப்பதாக அரசு எம்மீதுகுற்றம்சுமத்துகிறது".

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டம் நீடிப்பு மீதான விவாதத்தில் நேற்று பேசியபோது கூறினார்

திரு. அநுரா பண்டாரநாயகா தொடர்ந்து பேசுகையில், "நாம் தீவிரவாதிகளுக்கு ஆதரவளிக்கவில்லை. ஆனால் நாம் ஆதரவு வழங்கினால் அவர்கள் இலகுவாகத் தனிநாடு அமைக்கலாம் தாதிமார் தொழிற்சங்கத்தைஅரசு தடைசெய்துள்ளது. ஆனால் அரசுக்கு எதிராக யுத்தம்செய்யும் தமிழர் விடுதலைக் கூட்டணியை அரசு தடைசெய்யவில்லை இது ஏன் என்று புரியவில்லை" என்றார். [ய-பி]

## அதிவேக ரோந்துப் படகுகளை அரசு வாங்க முயற்சி

[சென்னை]

இலங்கைக் கடற்படையை மேலும் பலப்படுத்தும்நோக்குடன் மேற்குநாடுகளிடமிருந்து வேகம் கூடிய ரோந்துப்படகுகளைத்தருவிப்பதற்கு இலங்கை அரசு முயற்சிசெய்து வருகின்றதாம்.

இதுபற்றிய தகவல் 'ரைம்ஸ் ஒப் இந்தியா' பத்திரிகையில் அதன் லண்டன் நிருபரால் வெளியிடப்பட்டுள்ளது.

கடலில் வேகமாகப் பிரயாணம் செய்யக்கூடிய இக்காவல் படகுகளைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கையிலுள்ள பிரிட்டன், அமெரிக்கா உட்பட மேற்குநாடுகளான தூதரகங்கள் மூலமாக இலங்கை அரசு முயன்று வருகின்றதாம்.

இதற்கென 30 கோடி ரூபாவை அரசு ஒதுக்கியிருப்பதாகவும் அச்செய்தி கூறுகின்றது.

## கொள்ளையடிக்க முயன்ற ஊர்காவல்படையினர் இருவர் பலி மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

கன்னியாவில் உள்ள வீடொன்றுக்குள் கொள்ளை அடிக்கமுயன்ற ஊர்காவல் படையினர், தமது இயக்கத்தினரால் வைக்கப்பட்டிருந்த சூழ்ச்சிப் பொறிக்குள் அகப்பட்டதில் இருவர் பலியானதாகவும் மூவர்படுகாயமடைந்ததாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதுசம்பந்தமாக விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"கன்னியா கிராமத்தில் தமிழ் மக்கள் ஏற்கனவேதமது இல்லங்களில் இருந்து வெளியேறியுள்ளனர். அப்படியாக வெளியேறி வீடொன்றில் எமது வீரர்கள் முன்கூட்டியே சூழ்ச்சிப் பொறி வைத்திருந்தனர்.

"நேற்று முன்தினம் இவ் வீட்டில் ஊர்காவல் படையினர் கொள்ளையிட முயன்றனர் அப்பொழுது இச்சூழ்ச்சிப் பொறியில் அகப்பட்ட இரு ஊர்காவல் படையினர் பலியானதுடன் மூவர் படுகாயமடைந்தனர். இச்சம்பவத்தின் போது எம்மவர்களால் ஒரு துபபாக்கி கைப்பற்றப்பட்டது. (மா)

## கூட்டுபிரார்த்தனை

[யாழ்ப்பாணம்]

இறைவன் திருநாமம் ஒலி அலைகள் மூலம் அயல் முழுவதும் வியாபிக்கச் செய்வதன் வாயிலாக அயலில் நிகழக் கூடிய தீமைகளைக் குறைக்கும் நோக்குடன் கடந்தமாதம் 27ம் திகதி நடந்த சங்காபிஷேகத்தைத்தொடர்ந்து நாவலர் வீதி வண்ணைஸ்ரீ அங்குசபாசப் பிள்ளையார் (கிரிப்பிள்ளையார்) கோவிலில் தினந்தோறும் நடாத்தப்பட்டுவரும் திருமுறைக் கூட்டுப்பிரார்த்தனை இன்று முப்பத்தி ஓராம்நாளாக நடைபெறுகிறது.

## மரண அறிவித்தல்

### சுந்தரம்பிள்ளை துரைராசா

பொலிஸ் சார்ஜன்ட் (அளுத்கம)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கிளிநொச்சியில் வாழ்பவருமாகிய சுந்தரம்பிள்ளை துரைராசா காலமாகிவிட்டார் இவர் தவபாக்கியசிகாமணியின் அன்புக்கணவரும், தவனேஸ்வரி, சிவனேஸ்வரி. புவனேஸ்வரி, பவளேஸ்வரி, சுகந்தராஜ் ஆகியோரின் அன்புத்தந்தையும், சேதுபதி (கிராமசேவையாளர்), சிரோண்மணி (இளைப்பாறிய ஆசிரியை), பராசக்தி (இந்துமகாவித்தியாலயம், கிளிநொச்சி), நடராசா (விரிவுரையாளர், பலாலி ஆசிரிய கலாசாலை), குலேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகாலிங்கசிவம், வைத்திலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியை கிளிநொச்சியில் 26-04-86 சனிக்கிழமை பகல் 11-00 மணிக்கு நடைபெறும். தகவல்: மனைவி, பிள்ளைகள்.

[C 2008]

### திரு. கபிரியேற்பிள்ளை பெஞ்சமின்

நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கரம்பொனில் வசிப்பவருமாகிய கபிரியேற்பிள்ளை பெஞ்சமின் 24-04-86 இல் காலமானார். இவர் அந்தோனியாப்பிள்ளையின் அன்புக்கணவரும், றீற்ரு றெஜீனு (கணக்காளர், (Oriental Sign Ltd), யூடித் மல்லிகா சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். இவரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை (26-04-86) காலை 9 மணிக்கு ஊர்காவற்றுறைச் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். தகவல்: பெ. அந்தோனியாப்பிள்ளை. ஆஸ்பத்திரி வீதி, கரம்பொன், ஊர்காவற்றுறை.

(C 1988)

### நாகலிங்கம் இரகுநாதன்

(முன்னாள் கூட்டுறவு பரிசோதகர், யாழ்ப்பாண நகர கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க பொதுமுகாமையாளர்)

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த நாகலிங்கம் இரகுநாதன் காலமாகிவிட்டார் அன்னார் சிவயோகமணியின் அன்புக்கணவரும், தில்லைநாதன் (Chemanex Ltd, Colombo) ராகினி சிவசிதம்பரம் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசிதம்பரம் (Deputy Engineer Land Reclamation and Development Corporation, Colombo) அன்னாரின் மாமனாரும், தெய்வநாயகி வீரசிங்கம் (சிங்கப்பூர்) அவர்களின் அன்புச் சகோதரனுமாவார். ஈமக்கிரியைகள் இன்று 26-04-86 சனிக்கிழமை பி. ப. 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கொத்தத்துறைமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மணியகார வளவு,
வட்டுக்கோட்டை. தகவல்: இ. தில்லைநாதன்

C 2014

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு சித்திரை மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389.
04126